உ

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம்
திருவள்ளுவர் அறநெறி பாடசாலை
நடாத்தும்

தமிழ் பெருமை பாடும்
தனிப்பெரும் தமிழர் திருவிழா

தமிழ் கலை விழா
சிறப்பு மலர்
2007



"வெளியீடு :- பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்க செயற்குழு அங்கத்தவர்கள்

படத்தில் அமர்ந்திருப்பவர்கள் இட – வலமாக

வி. சண்முகசுந்தரம் (உப பொருளாளர்), என். சௌந்தரராஜன் (உப தலைவர்), ஜி. புஸ்பலிங்கம் JP (தலைவர்), வி. பெரியசாமி (உப செயலாளர்), எம். செல்வராஜா (நி. கு. அ)

நிற்பவர்கள் இட – வலமாக

இரா. மகேஸ்வரன் JP (இதழாசிரியர்), என். கனகராஜ் (பொருளாளர்) டி. தேவசகாயம் (நி.கு.அ), ஆ. கிருஷ்ணமூர்த்தி (கணக்காய்வாளர்) எஸ். விவேகானந்தன் (நி.கு.அ) ஜி. சுந்தரலிங்கம் (போஷகர்), பி. மனோகரன் (நி.கு.அ), எஸ். வைகுந்தன் (நி.கு.அ), எம்.பி. விக்னேஸ்வரன் JP(செயலாளர்), ஏ. ஜெகதீஸ்வரன் (நி.கு.அ), எஸ். சௌந்தரராஜ் (நி.கு.அ)

(நி.கு.அ. :- நிர்வாக குழு அங்கத்தவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண முதலமைச்சர் கௌரவ சரத் ஏக்கநாயக்க அவர்களின் வாழ்த்துச் செய்தி



UNIVERSITY OF PERADENIYA
MAR 2008
LIBRARY

தேசிய ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் பணிகளில் முக்கிய அங்கமாக சமூக நல்லொழுக்க மேம்பாடு அமைகின்றது. இந்த நல்லொழுக்க மேம்பாட்டை கருத்திற்கொண்டு கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த, குண்டசாலை தேர்தல் தொகுதியின், பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச் சங்கம் கடந்த மூன்றாண்டு காலமாக மேற்கொண்டு வரும் நற்பணிகள் பாராட்டுக்குரியன.

நாளைய தலைமைத்துவத்தை தாங்கவுள்ள இன்றைய சிறார்களுக்கு கல்வியோடு, தூய ஒழுக்கநெறிகளையும் வழங்கும் வகையில் இந்த முன்னேற்றச் சங்கம் நடாத்தி வரும் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலை கடந்த மூன்றாண்டு காலமாக முன்னெடுத் துவரும் முத்தான பணிகள் நாளைய தலைமுறையினருக்கு நற்பயனளிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தூய நோக்கிலும், தூரநோக்கிலும் மேற்கொள்ளப்படும் இந்த அறநெறிப் பாடசாலை இன்று மூன்றாம் ஆண்டு கலைவிழாவை வெகு சிறப்பாக நடாத்துவதை எண்ணி மகிழ்கின்றேன்.

இந்த விழா வெற்றி காணவும், இந்த அறநெறி பாடசாலை வளர்ச்சி காணவும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிச்செய்தி

கடந்து மூன்றாண்டு காலத்திற்குள் வெகு சிறப்பாகவும், அனைவரும் மெச்சும் விதத்திலும் வழி நடத்தப்பட்டு பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்ற பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச் சங்கம் தன்னுடைய மூன்று ஆண்டுகால நிறைவையொட்டியும், முதலாவது இந்து கலாசார விழாவை யொட்டியும் 2007.05.31ம் திகதி கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடாத்தப்படுகின்ற விழாவில் வெளியிடப்படுகின்ற மலருக்கு நான் ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

மனிதனுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை இருக்க வேண்டும். இம் மன இயல்பு மனிதனிடம் அமைந்து இருக்கும் போது மனிதனின் மனம் மனிதனை இயல்பாக பக்தி நெறிக்கு இட்டுச் செல்லும் அதனிலும் மனிதனிடம் பாசமோ, நம்பிக்கையோ வைப்பதை விட இறைவனிடம் நம்பிக்கை வைக்கும் போது அவற்றிக்குப் புதிய மகத்துவம் ஏற்பட்டு மனதோடு நிரந்தரம் ஆகிவிடும். அந்த இறைவன் மீது வைக்கும் பக்தி நமது மனவளத்தின் சிறப்புக்கு ஆதாரமாக இருக்கின்றது என நமது ஆன்மீகப் பெரியார்கள் கூறிய நல்வாக்கின்படி இம் முன்னேற்றச் சங்கம் தமிழ் பாரம்பரியங்களோடு, இந்து சமய வழிகாட்டுதல்களையும், நற்பணிகளையும், நம்பிக்கையினையும் மக்களிடையே கொண்டு சென்று இந்து சமயத்திற்கு ஆற்றும் சமயப் பணி அளப்பரியது.

ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைப் போற்றும் இந்து மதம் தழைத்தோங்குவதற்கும் உறுதுணையாக சேவையாற்றிவரும் தங்களின் சமயப்பணி இன்று போல் என்றும் தொடர்ந்து எமது மக்களுக்கு கிடைக்கவும், இந்து கலாசார முன்னேற்றச் சங்கம் மென்மேலும் சிறப்புற்று விளங்கி சகலருக்கும் நன்மை பயக்க வேண்டும் எனவும் பிரார்த்திப்பதோடு தங்களின் விழா சிறப்புற நடைபெற மனதார வாழ்த்துகின்றேன்.

எஸ் அருள்சாமி
மத்திய மாகாண இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து செய்தி

கண்டி மாநகருக்கு அண்மித்து அமைந்திருக்கும் குண்டசாலை பிரதேசத்தில் தமிழர்களும் குறிப்பாக இந்துக்களும் செறிந்து வாழ்கின்றனர். மிக வேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் இப்பகுதியில் எம் மக்கள் அதிகமாக குடியேறுகின்றார்கள்.

இவர்களது கலை, கலாசார, சமய முன்னேற்றத்திற்காக உருவாகிய பலகொல்ல இந்து காலசார முன்னேற்றச் சங்கம் கடந்த மூன்று ஆண்டுகள் பல சிறப்பான நிகழ்ச்சிகளையும், சேவைகளையும் நிறைவேற்றியுள்ளது. அறநெறி வகுப்புகள், சங்கீத, நடன வகுப்புகள் நடத்துவது எம்மவர்க்கு வரப்பிரசாதமாக அமைகின்றது.

மிகச்சிறப்பாக பணியாற்றிவரும் இச்சங்கத்தின் திட்டங்களிலும், வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்ட ஒருவன் என்ற ரீதியில் மிகப் பெருமையுடன் சங்கத்தின் மூன்றாண்டு நிறைவையொட்டி நடைபெறும் கலாசார விழா சிறப்பாக நிறைவேற எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதள்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

துரை. மதியுகராஜா.
மத்திய மாகாண சபை உறுப்பினர்.
உப தலைவர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
பேராதனை பல்கலைக்கழக மேலவை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிச்செய்தி

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்"

இவ்வாறு திருவள்ளுவர் அன்பு முதலாகப் பல நல்ல அறக்கருத்துக்களைத் திருக்குறளுடாகக் கூறியுள்ளார். அத்தகைய அறநெறியை எம். சமுதாயத்திற்கு மட்டுமல்ல அனைத்து உலகத்திற்கும் எடுத்துக்காட்டிய அறநெறி வள்ளலாகிய திருவள்ளுவரது நாமத்தினைச்சூட்டி இன்று தனது 3வது நிறைவு ஆண்டினை சிறப்புடன் கொண்டாடுகின்ற திருவள்ளுவர் அறநெறிப்பாடசாலை உண்மையிலே திருவள்ளுவர் என அவரது நாமத்தைப் பெற்று விளங்குவது இப்பாடசாலைக்கு மேன்மையான சிறப்பினைத்தருகிறது.

அறநெறி என்றால் என்ன? அன்பு வழி, தர்மவழி, எல்லோரிடமும், எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகினால் நற்செயல்கள் அனைத்தும் நல்லமுறையிலிடம்பெறும். அன்பிருந்தாலே எதுவும் நன்மையாக நடக்கும். "அன்பே சிவம்" என்கிறது திருமந்திரம்.

எனவே தர்மத்தை, அறத்தை நெறிப்படுத்தி வழிநடத்த உருவாகிய இப்பாடசாலையின் ஆரம்பவிழாவில் நானும் அதிதியாக கலந்து கொண்டேன். மூன்று வயதில் திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு, தேவாரம் பாடியதுபோல் மூன்றே மூன்று வருடமானாலும் இப்பாடசாலை பல அரிய சாதனைகள் படைத்துள்ளது. சிவராத்திரி நவராத்திரி விழாக்களோடு, பல சமயப்பணிகளையும் ஆற்றி மாணவர்களை நல்லறிவு மிக்கோரால் ஆற்றுப்படுத்தி வருவது பாராட்டத்தக்கது. இதனை நிர்வகிக்கும் நிர்வாகிகள் பல முயற்சிகள் செய்து இப்பாடசாலையை சிறந்த முறையில் பரந்தசேவை மனப்பான்மையில் நடத்துவது மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டுவதற்குரியதுமாகும்.

மேலும் இங்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் புன்னகைத்தவழும், பொறுமையுடைய பூமாதேவிகளே என்றால் மிகையில்லை.

இப்படி ஒரு சிறந்த நிர்வாகம், நல்ல ஆசிரியர்கள், நல்ல மாணாக்கர் எனக் கூட்டாக யாவும் சிறந்து விளங்குவதால் மூன்றாண்டிற்குள் பல சாதனைகள் படைத்துள்ளது. பெருமை தரும் விடயம்.

இதே போல் திருவள்ளுவர் எவ்வாறு அறக் கருத்துக்களை வெளிப்படுத்தி இன்று உலகம் போற்றும் உத்தமமானாரோ, அதேபோல் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலையும் உலகம் போற்றும் சிறந்த மேலான இடத்தை பெறவேண்டுமென எனது அன்பு நிறைந்த நல்லாசிகளைக்கூறி இனிதே விடைபெறுகின்றேன்.

மாணிக்கராஜசர்மா
திருமதி - மா- அனந்தலெட்சுமி
இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரின் வாழ்த்துச்செய்தி



தென்றல் தவழும் குன்றுகள் நிறைந்த அழகிய மத்தியமாநகரிலே, கலை, கலாசாரம், பண்பாடுகள் என பல நிறைந்து விளங்குவது எமது "திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலையாகும்.

இந்த அறநெறிப் பாடசாலையின் மூன்றாம் வருடப் பூர்த்தியை முன்னிட்டு கலைவிழா கொண்டாடப்படுவதையிட்டும், இவ்விழாவிலே வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டும். நான் பேருவகை அடைகின்றேன்.

தமிழும் சைவமும் தழைத்தோங்க கலையும், கலாசாரமும் தமிழ் மக்கள் வாழ்வில் சிறப்புற அமைய வேண்டும். இன்று விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் கண்டுள்ள முன்னேற்றத்தைப் பார்க்கும் போது, நாம் அதற்கு இணையாக எமது பாரம்பரியமும், கலாசாரமும் எங்கே இருக்கின்றன என்று திரும்பிப்பார்த்து தேட வேண்டியுள்ளது. நமது பழம்பெரும் சமயக்குறவர்களும், பெரியவர்களும் பேணி பாதுகாத்த தமிழையும், சைவத்தையும், கலாசார, கலை நுட்பங்களையும், பாதுகாக்க வேண்டியது தமிழர் தம் கடமையன்றோ! அதற்கு இவ்வாறான கலை விழாக்கள் சான்றுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எமது கலைவிழா சிறப்பு மலரும், ஏனைய கலை, நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக அமைய எல்லா வழிகளிலும் செயலாற்றிய எமது அங்கத்துவ பெருமக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பே வெற்றிக்கு காரணமாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை இவ்வகையில் எம் மாணவர்களின் வளர்ச்சிக்கும், ஏனைய எல்லா வகையிலும் ஒத்துழைப்பும், ஆதரவும் தந்து ஊக்கமளித்த அனைவருக்கும் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் நான் என்றும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்விழாவிற்கு, உள்ளத்தாலும், உழைப்பாலும், நிதி உதவிகள் பலசெய்தும், விழா சிறப்புறமிளிர அனைத்து வழிகளிலும், ஆற்றலுடனும், திறமையுடனும் செயலாற்றிய நிர்வாக குழுவினர் உட்பட எல்லா அன்பு நெஞ்சங்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்ளுவதுடன் இக் "கலைவிழா சிறப்பு மலர்" சிறப்பாக வெளிவரவும். எமது தமிழைப் பேணி பாதுகாக்க உங்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறும், அன்புடன் கூறி, எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி ஆசியும்; வாழ்த்தும் வழங்கி, மனமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

கோ. புஷ்பலிங்கம் (J.P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்க உப தலைவரின் செய்தி.



எழில் கொஞ்சும் மத்திய மலை நாட்டின் தலைநகராம் கண்டியிலே பலகொல்ல என்னும் கிராமத்தில் கடந்த 24.01.2004 ஆரம்பிக்கப்பட்ட எமது திருவள்ளுவர் அறநெறி பாடசாலை மூன்று வருடங்களாக எல்லா தடைகளையும் தாண்டி பல மாணாக்கர் களுக்கு அறநெறிக்கல்வியைப் போதித்து வருவதையிட்டு நான் பேருவகை அடைகின்றேன்.

மேலும் இந்த பிஞ்சு உள்ளங்களின் பல கலையம்சங்களை மேடையேற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆவலில் கண்டி வாழ் பல பிரமுகர்கள் ஆசிரியர்கள் அரச நிறுவனங்கள், சங்க அங்கத்தவர்கள் ஆகியோரின் உதவியுடனும் அயரா உழைப்பின் பிரதி பலனாகவும் 31.05.2007 கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் தமிழ் கலை விழா எமது முயற்சியின் ஒரு மைல் கல்லாகும். மேலும் எமது முயற்சிகள் ஆல்போல் தழைத்து வளர்ந்து மேன் மேலும் பல நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு பயன் தர வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதோடு இந்த கலை விழா சிறப்பாக நடை பெற உதவிய எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

N. சௌந்தரராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளரின் செய்தி

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச் சங்க வரலாற்றில் மாபெரும் திருப்பம் என்று துணிவாக பொன் எழுத்துகளால் எழுதக்கூடிய தமிழ் கலை விழா 2007ல் நான் செயலாளராக இருந்து பொறுப்பு ஏற்று நடத்துவதை எண்ணி பூரிப்படைகிறேன் - கடந்த மூன்று வருடமாக நான் செயலாளராக கடமையாற்றியதில் முதலாவது திருப்பம் திருவள்ளுவர் அறநெறி பாடசாலையை நிறுவியது; அதனை தொடர்ந்து பல சுப காரியங்கள் நடாத்தி இன்று இறுதியாக கண்டி வரலாற்றிலும் கூட தமிழ் சான்றோருக்காக நடைபெரும் முதல் விழா இது என்பதை நினைத்து நான் பெருமை அடைகிறேன் - இந்த சபைக்கு இனிவரும் செயளாளர்களும் இன்னும் பல மடங்கு புதுமை படைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

பிறப்பும், இறப்பும் நியதி; பிறப்பு என்பது நமக்கு தெரியும் இறப்பை இரகசியமாக இறைவன் வைத்தான். மரணத்தை இந்த தேதியில் தான் வரும் என்று மனிதன் உணர்ந்தால் ஆணவத்தால் உலகம் அழிந்துவிடும் - மனிதன் இறைவனை நினைக்க மாட்டான் - எல்லோரும் பணம் சம்பாதித்து இராஜ வாழ்கை வாழ்ந்தாலும் - மகாராஜன் என்று பெயர் இட்டு கொண்டாலும் உயிர் உடலை விட்டு பிரிந்த மறுகணம் அவன் பெயர் பிணம் என்றாகிறது சிந்தித்து பாருங்கள்; ஒரு மனிதனின் மரணத்தின் பின்பு அவன் பெயர் உலகத்தில் நிலைக்க வேண்டும் - அதற்கு நாம் உலகுக்கு எதையாவது விட்டுச்செல்ல வேண்டும் - நமது சான்றோர்கள் விட்டுச்சென்றதை நாம் இன்று அனுபவிக்கிறோம். நாம் எதையாவது விட்டுச் செல்ல வேண்டும் இனிவரும் சமுதாயம் நமது பெயர் சொல்ல, வள்ளுவர் நம்மை போல் உண்டு உறங்கி இறந்து மரணித்து இருந்தால் இத்தனை நூற்றாண்டுக்கு பிறகு நாம் திருவள்ளுவரை நினைத்திருக்க மாட்டோம் பாரதியார், சுவாமி விவேகானந்தர் ஏன் இந் நூற்றாண்டில் அன்னை திரேசா, கவிஞர் கண்ணதாசன் என்று பலரை சொல்லிக்கொண்டு போகலாம். ஆகவே அன்பு நெஞ்சங்களே நாம் வாழ்வதும் மரணிப்பதும் நாம் அறியாமலே நடக்கும். இதற்கு இடைப்பட்ட காலத்தில் நாம் பொது நலமான சேவைகளை கட்டாயம் செய்யவேண்டும். இதுபோன்ற கலை விழாக்களை நடாத்து வதன் மூலம் நமது தமிழுக்கும், மண்ணுக்கும் பெருமை சேர்த்த உத்தம புருஷர்களை இனி வரும் இளம் சமுதாயத்திற்கு அறிமுகம் செய்ய முடிகிறது. அதன் மூலம் அவர்கள் மத்தியில் சேவை உணர்வை தூண்ட முடிகிறது. அப்படி பல தூண்டல்கள் உருவானதால் தான் உலகுக்கு பல உத்தமர்கள், மகான்கள் தோற்றுவிக்கப்பட்டார்கள். மகான்கள் என்றும் மேதைகள் என்றும் எவரும் உலகில் பிறக்கவில்லை அவர்கள் அனைவரும் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டவர்கள். கௌத்தம புத்தர் உலக துன்பத்தைக் கண்டு திடீரென உருவாக்கப்பட்டவர். இன்று உலகில் தெய்வத்துக்கு சமனாக அவர் போற்றப்படுகிறார். ஆகவே நாம் நமது இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். நம் மூதாதயர்கள் நம் பூமிக்கும், மொழிக்கும் செய்த சேவையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் இது போன்ற கலை விழாக்களை நாடு முழுவதும் நடாத்தப் பட வேண்டும். இந்த கலைவிழா இவ்வருடம் மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் சிறப்புடன் நடைபெற வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

மாரிமுத்து பிள்ளை விக்னேஸ்வரன் JP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வரலாற்றில் - பலகொல்ல அகமும் - புறமும்

ஆர். மகேஸ்வரன்
BA(Hons), Master of Library and information Science
சிரேஷ்ட துணை நூலகர்,பேராதனைப் பல்கலைக்கழகம்.

பலகொல்ல தமிழர் வரலாற்றினை இலங்கை வாழ் தமிழரின் பூர்வீக வரலாறு, இலங்கையில் இந்தியத் தமிழர் வரலாறு, அதனோடு பிற்பட்ட கால இந்திய பெருந்தோட்ட தொழிலாளர்கள் வருகையும் அதன் வரலாறும் ஆகியவற்றினை புறந்தள்ளி ஆராயமுடியாது.

தெல்தெனிய நகரம் துரிதமகாவலி அபிவிருத்தி திட்டத்தில் விக்டோரியா நீர் தேக்கத்தின் நீரில் மூழ்கியதன் காரணமாக அரசினால் அப்பகுதியில் வாழ்ந்தவர்களுக்காக வழங்கப்பட்ட மீள் குடியேற்றத்திட்டத்தில் வழங்கப்பட்ட காணிகளில் குடியேறியத்தமிழர்களோடு, அண்மைக்காலத்தில் தோட்டங்கள் அழிக்கப்பட்டு கிராமங்களாகும் சூழலில் புதிதாக காணிகள் வாங்கி வீடுகள் கட்டி குடியேறியத் தமிழர்களோடு, இப்பகுதிகளில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களாக வாழ்ந்த தமிழர்களினதும், நீண்ட காலமாக இப்பகுதியில் வாழ்ந்துவந்த தமிழர்களதும் வரலாறுகள் ஆராயப்பட வேண்டும்.

இலங்கையின் வரலாற்று நூல்கள் விஜயனின் இலங்கை விஜயத்திலிருந்தே ஆரம்பிக்கின்றன. ஆனால், அதற்குமுன்னரே இங்கு நாகரும், இயக்கரும், முண்டரும் வாழ்ந்துள்ளனர். அதிலும் நாகவம்சத்தவரும் தமிழரும் கலப்பு மிசிர குலத்தவரும் அனுராதபுரத்தினை ஆண்டனர்[1] என மகாவம்சமே கூறுகிறது.

இலேமூரியா கண்டம் உள்ளமுக்க விசையினால் காலத்திற்கு காலம் பெயர்ச்சி பெற்றதுடன், கடல் கோள் காரணமாக இந்தியா - இலங்கை பிரிந்து, இலங்கை தனி தீவானது என்பதும், ஜுராசிக், மெசோசொயிக், செனோசொய்க் காலங்களின் அடிப்படையில் நீண்டகால இடைவெளியில் இந்தமாற்றம் ஏற்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே இந்திய தமிழ்நாட்டு மக்களும், இலங்கை மக்களும் ஒரு காலத்தில் ஒன்றாக வாழ்ந்து பின்னர் பிரிந்தவர்கள்.

இவைதவிர மகாபாரதத்திலும், இராமாயனத்திலும் இலங்கை தொடர்புபட்டுள்ளது. அர்சுனன் நாக இளவரசி சித்ராங்தியை. கீரிமலையில் சந்தித்து மணந்ததாகவும், இராமாயனத்தில் இராவணன் ஈழத்து மன்னன் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் தமிழரசர்களது ஆட்சி காலத்தில் அவ்வரசர்களது விசுவாசமான ஆட்சிக்கு உதவக்கூடிய நண்பர்களையும், சுற்றத்தார்களையும் கலைஞர்களையும், போர்வீரர்களையும், ஆலோசகர்களையும் தமிழ் நாட்டிலிருந்து அழைத்துவந்தனர். இலங்கையை ஆண்ட சிங்கள மன்னரும் இந்திய தமிழ் இராச பரம்பரைகளில் பெண் எடுத்தனர். பெண்ணோடு சுற்றத்தார்கள் இலங்கைவந்து குடியேறினர். விஜயனோடு இலங்கை வந்த 700 தோழர்களும் கூட மதுரையிலேயே பெண் எடுத்துள்ளனர். வர்த்தக நோக்கத்திற்காக காலத்திற்கு காலம் தமிழர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளனர். வந்தவர்கள் இங்கு திருமணம் செய்து வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜபாகு மன்னன் சோழ நாட்டிலிருந்து சிறை பிடித்துவந்த 12,000 கைதிகளில் பெருந்தொகையினர் மகா தளய, தும்பறை ஆகிய இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டுள்ளனர். "மகா தளய" என்பதே மாத்தளை எனவும்,[2] தும்பறை பகுதியே பாத்ததும்பறை, உடதும்பறை, குண்டசாலை, தெல்தெனிய என பல தொகுதிகளாக பிற்காலத்தில் பிரிக்கப்பட்டுள்ளன.

கஜபாகு மன்னரே சேரநாட்டில் அரசு செய்த சேரன் செங்குட்டுவன் காலத்தில் கண்ணகிக்கு சிலை எடுத்த விழாவில் கலந்துக் கொண்டு தன்னுடன் கண்ணகி தெய்வத்தினை இலங்கைக்கு கொண்டு வந்ததாக சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில் வரத்தருகாதை 160ம் வரியில் சொல்லப்பட்டுள்ளது. கண்டி பத்தினி தேவாலயம் - கண்ணகி தெய்வத்தின் பெயர்மாற்றமேயாகும்.

அசேலன் காலத்தின் சோழர்கள் படையெடுத்து வந்து எல்லாளன் தலைமையில் 44 வருடங்கள் இலங்கையை ஆண்டனர். இக்காலத்தில் சோழ நாட்டவர்கள் இலங்கையில் குடியேறினர்.

இலங்கையின் மலைப் பிரதேசத்தின் தலைநகராக இலங்காபுரி இருந்ததெனவும் இது "திரிகூடபர்வதம்" மலையின் உச்சியில் விளங்கியதாகவும் இதனை இராவணன் தனது தலைநகராக கொண்டிருந்தான் என்றும் கூறப்படுகிறது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கிடைத்த சாசனம் ஒன்றில் 13ம் நூற்றாண்டில் 1256இல் பாண்டிய பேரரசன் ஜடாவர்மன் சுந்தரப்பாண்டியன் படையை அனுப்பி சகோதரனான வீரபாண்டியன் இலங்கையை வென்றதும் தனது வெற்றிக்கு அடையாளமாக பாண்டிய மீன் சின்னத்தினை திருகோணமலை திரிகூடபர்வத்தில் பொறித்ததாகவும் விபரிக்கப்படுகிறது, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1251 - 1262 வரை ஆட்சி செய்துள்ளார் - இவர் மலைநாட்டுடன் தொடர்புகளை ஏற்படுத்தியதன் காரணமாக திருகோணமலை - கம்பளை வரை தனது விசுவாசிகளை குடியமர்த்தினார் எனக் கூறப்படுகிறது. இது தும்பறை வழியாகவே இடம் பெற்றதாகவும் குண்டசாலை பகுதியில் தமிழர் இருந்ததாகவும் கூறப்படுகிறது, இதனை இராஜாவளிய, பூஜாவளிய, தலதாவளிய ஆகியவற்றிலும் வெவ்வேறு விதமாக குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

விஜய நகர அரசர்களாகிய 2ஆம் ஹரிகரனும் (1379 - 1406), 2ஆம் தேவராயனும் (1438) இலங்கையைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்த காலத்திலேயே கடலாதெனிய, இலங்காதிலக்க விஹாரைகள் விஜயநகர் சிற்ப முறையில் கட்டப்பட்டுள்ளன. இவை விஷ்ணு வழிப்பாட்டு மையங்கள். இக்காலத்தில் இவர்களாலேயே பிட்டிய தேவாலய என அழைக்கப்படும் பத்தினி தேவாலயம் குண்டசாலை (வராபிட்டிய வழி) யில் அமைத்துள்ளனர்.

செனரத் (1605 - 1635) மன்னரது இரண்டு புதல்வர்களும் யாழ்ப்பாண மன்னரது இரண்டு புதல்விகளை திருமணம் செய்ததாக சில வரலாற்று நூல்களும், மதுரை இளவரசியை திருமணம் செய்ததாக சில வரலாற்று நூல்களும் கூறுகின்றன. எனவே இளவரசிகள் இருவரும் தமிழர் என்பது நிரூபனமாகிறது. செனரத்தின் இரண்டாவது மகன் 2ஆம் விமலதர்ம சூரியன் (1687 - 1706) அரசனானார். இவர் தஞ்சாவூர் மன்னனின் மகளைத் திருமணம் செய்தார். இந்த திருமணத்திற்கு ஏராளமான தஞ்சாவூர் வாசிகள் வந்து கலந்துக் கொண்டதோடு இவர்கள் கண்டியிலேயே தங்கிவிட்டனர். தஞ்சாவூர் போர் வீரர்கள் கண்டிப் படையில் சேர்ந்தனர். இவர்கள் "வடக்கத்தையர்" எனா அழைக்கப்பட்டுள்ளனர். விமலதர்மசூரியன் 1706 ல் இறந்து போக தஞ்சாவூர் அரசிக்கு மகனான ஸ்ரீ நரேந்திரசிங்கன் (1706 - 1739) ஆட்சியாளனானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ நரேந்திரசிங்க "கலாபுர" என்ற கலா~கலை கிராமத்தின் பெயர் பலகை

மறைந்த ஜனாதிபதி கௌரவ R. பிரேமதாச அவர்களால் 1989ம் ஆண்டு அமைக்கப்பட்ட பள்ளேகல கம் உதாவ திட்டத்தின் போது ~ கண்டியை ஆண்ட மன்னர்களின் உருவசிலைகளை கம் உதாவ வாயிலில் அமைத்திருப்பதைக் காணலாம்



ஆயோஜனகம முத்துமாரியம்மன் கோயில்



பள்ளேகல ஜயஸ்ரீ உயனவுக்கு போகும் வழியிலுள்ள பழைமைவாய்ந்த வைரவர் சூலாயிதம், வேல், முனியாண்டி வழிப்பாட்டிடம்

பள்ளேகல காளியம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரேந்திர சிங்கனின் காலாத்தில் கண்டி இராச்சிய திஸாவ (சிற்றரசர்கள்), நிலமேக்கல் போதியளவு ஒத்துழைப்புகள் வழங்காத காரணத்தினாலும், சந்தேகங்கள் காரணமாகவும் குண்டசாலையை தனது பாதுகாப்பு இடமாகக்கொண்டு ஆட்சி செய்ததோடு களஞ்சிய சாலைகளை குண்டசாலை பகுதியிலேயே நிறுவினான். பள்ளேகல பகுதியில் தனது வயல் வெளிகளுக்கு நடுவில் களஞ்சியசாலையை நிறுவினான். இது தற்போது விவசாயக் கல்லூரி ஆண்கள் விடுதி அமைந்துள்ள பாதையில் காணப்படுகிறது.

இவர் கலைஞர்களுக்காக உதவியவர். சிற்பக்கலைஞர்களை ஆதரித்தவர். எனவேதான் இதனை கௌரவித்து நத்தரம்பொத்தவில் நரேந்திரசிங்க கலாபுர "என்ற பித்தளை கைத்தொழில் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. இவர் காலத்து இவரது தோட்டமே "இராசா தோட்டம்" என அழைக்கப்பட்டுள்ளது. இது "இராச வத்த" என சிங்களத்தில் அழைக்கப்பட்டு பின்னர் "இராஜ வத்த" யாகி இன்று "ரஜவல்ல" யாகமாறி ரஜ வல என அழைக்கப்படுகிறது ஆர். பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த போது கட்டப்பட்ட "கம் உதாவ". திட்டத்தில் மன்னர் செனரத், நரேந்தர சிங்கன் ஆகியோரது சிலைகள் பள்ளேகல தோட்டத்தில் கம்உதாவ வாயிலில் அமைக்கப்பட்டுள்ளன.

நரேந்திர சிங்கனே கடைசி சிங்கள கண்டி மன்னன் என வரலாறு கூறுகிறது அவனுக்கு பின் நரேந்திரசிங்னின் மனைவியின் சகோதரனான ஸ்ரீ விஜயராஜசிங்கன் (1739 - 1747) அவன் மனைவியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 - 1781) மரணத்தின் பின் அவனது சகோதரன் இராஜாதி இராஜசிங்ன் (1781 - 1798) மனைவியின் சகோதரனான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் (1798 - 1815) என நாயக்க வம்ச தமிழர்கள் 76 ஆண்டுகள் கண்டி ராஜ்யத்தினை ஆண்டனர். இவர்கள் நாயக்க வம்சத்தினரையே திருமணம் முடித்தனர். இப் பெண்களோடு நாயக்க பிரதானிகள் கண்டிக்கு வந்து சேர்ந்தனர் இவர்களின் பலர் தலதா மாளிகைக்கும் - திகனைக்குமான வீதியிலும் பள்ளேகல, ரஜவல, கெங்கல்ல, மெனிக்கின்ன பகுதிகளில் வாழ்ந்துமுள்ளனர், இவர்கள் மலபார் என அழைக்கப்பட்டனர். கண்டியில் மலபார் வீதியும் இருந்தது.

இவர்களுக்கு பின் வர்த்தகத்திற்காக செட்டியார்கள் வந்தனர், செட்டி யார்கள் பலர் கண்டி டீ.எஸ். சேனநாயக்க வீதி (முன்னர் திருகோணமலை வீதி) யில் வர்த்தகம் செய்தனர் இதனாலேயே இதற்கு செட்டியார் தெரு என பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள் பள்ளேகல, ரஜவல, கெங்கல்ல, அமுனுகம, சிரிமல்வத்த, மெனிக்கின்ன பகுதிகளிலேயே வீடுகள் அமைந்து பண்ணைகளை நடத்தி வாழ்ந்துள்ளனர். இங்குள்ள காணிகள் பலவற்றின் நீண்டகால உரிமை பதிவுகளில் செட்டியார் பெயர்களைக் காணலாம் சில காணிகள் "செட்டி நாட்டு காப்ரேஷன்" என்ற கம்பனி கூட்டுமுயற்சியின் மூலம் நடத்தப் பட்டுள்ளன. பால் உற்பத்தியில் இவர்களே தனியாதிக்கம் பெற்றிருந்துள்ளனர்.

அக்காலத்தில் தமிழ் மொழி கண்டி அரச சபையில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.[3] பின்னர் கண்டி தமிழ் மன்னர் ஆட்சி, சூழ்ச்சிகளின் காரணமாக ஆங்கிலேயர் வசம் போனதும் அஞ்சிய பல தமிழர்கள் மீண்டும் படிபடியாக தென் இந்தியா சென்றுள்ளனர்.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 - 1782) ஆட்சிகாலத்தில் தும்பறை திஸாவையே நிர்வாகக் கடமைகளை கவனித்து வந்துள்ளார். தும்பறை என்ற திஸாவையிலேயே தும்பறை, தெல்தெனிய, உடுதும்பறை பாத்ததும்பறை மற்றும். முழு குண்டசாலை பகுதியும் அமைந்திருந்தது. இது பிற்காலத்தில் உட தும்பறை - மேல்தும்பறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டுள்ளது. இது பின்னர் மேல் - உட, தோட்ட - வத்த, காடு - கெலே - என்று உடவத்தகெலே அது "உடவத்தகல" என்றும், கீழ்-பள்ள, காடு - கெலே என்பது பள்ளேகெலே பள்ளேகல என்றும் அழைக்கப்பட்டுள்ளது. பள்ளேகல பகுதியில் விவசாய நிலங்கள் காணப்படுள்ளது. குண்டசாலை, தெல்தெனிய, ஆகிய பகுதிகள் பெரும் வயல் வெளியாகவே காணப்பட்டதோடு மகாவலி ஆற்றையொன்றி பாதையமைப்பு காணப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் புத்தரின் புனித பல் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளது. இந்த புனித தந்தத்தினை வைத்திருப்பவரே மன்னராக கருதப்பட்டார். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747 - 1782) காலத்தில் டச்சுக்காரர் படையெடுப்பின் போது தலதா புனிதபல் தும்பறை பள்ளத்தாக்கு ஊடாக மெதமகநுவர, கிவுல்கம, கல்மடுவ, சிரிமல்வத்த அதன் பின் மீமுற, உடிஸ்பத்துவ, கம்பன ஆகிய இடங்களில் மறைத்து வைக்கப்பட்டதோடு, மீண்டும் கிவுல்கம, மெதமகநுவர, குண்டசாலை வழியாக இரண்டு வருடங்க ளுக்கு பின் செங்கடகலவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் புனித பல் (தும்பறை) குண்டசாலையிலேயே வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவேதான் இப்பகுதி விஹாரைகள் ரஜமகா விஹாரையென அழைக்கப்பட்டுள்ளன. குண்டசாலையென்பது பாத்த தும்பறை என்ற தொகுதிக்குள் அமைந்திருந்தது. 1970க்கு பின்னரே குண்டசாலை, பாத்ததும்பறை என பிரிக்கப்பட்டன, குண்டசாலையை தலைநகராக கொண்டு நரேந்திரசிங்கன் ஆட்சி செய்ததன் காரணமாக குண்டசாலை தெய்யோ குண்டசாலை சாமி - குண்டசாலை தெய்வம் என அம்மன்னர் அழைக்கப்பட்டுள்ளார். இப்பகுதியில் அக்காலத்தில் சிறிய அரசமண்டபம் (குடா - சாலாவ) இருந்ததால் குடாசாலா என்று பெயர் வந்துள்ளது. என்றும் இது மருவி குண்டசாலை என்று அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விக்ரம ராஜசிங்கன் ஆட்சியின் போது கண்டியில் வாழ்ந்த நாயக்க வம்சத்தினர் ஆங்கிலேயருக்கு பயந்து குருநாகல், மெல்சிரிபுர, கல்கமுவ, ஜோசப்வாஸ், வில்பாவ (வீரபாகுபுரம்) ஆகியவற்றிற்கும் ஹங்குராங்கெத்த, பதியபலள்ள, ஆறுகாமம், குருதெனிய, நத்தரம்பொத்த, குண்டசாலை, ஊருகொல்ல (மெதமாநுவர), முருகாமல ஆகிய பகுதிகளுக்கு பிரிந்து சென்றுள்ளனர். இவர்கள் பின்னர் சிங்களவர்களோடு ஒன்று கலந்ததோடு சிலர் இன்னும் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். முருகன்-மலையே முருகாமல என அழைக்கப்படுகிறது. இது முருக வழிப்பாட்டின் தொன்மையையும் உணர்த் துகிறது.

பிரித்தானியா ஆட்சிகாலத்தில் இந்திய விவசாயிகளிடம் நிலவரி திரட்டியமையும், நில உரிமைப் பெற்ற நில பிரபுக்கள் வறிய விவசாயிகளை அடிமைகள், தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கியதாலும், வாடகை, ரத்துமுறை, பஞ்சம், வறுமை, பட்டினி காரணமாகவும், கடன்பத்திரத்தினால் காணி இழந்தமையாலும் சுபீட்சமான வாழ்வுதேடி ஆங்கிலேயரை நம்பி பெருந்தோட்டத் தொழிலுக்காக இலங்கைக்கு பல தமிழர்கள் வருகை தந்தனர், இவர்கள் வந்த வரலாறு சோகமிக்கது. மிருகக்கடி, பாம்புக்கடி, நோய் ஆகியவற்றிலிருந்து தப்பி வந்த பலர், பெருந்தோட்டத் தொழிலுக்காக பள்ளேகலவுக்கும் வந்தனர்.

இவர்கள் செங்கல்பட்டு, மதுராந்தம், வட ஆற்காடு, தென்னாற்காடு, திண்டிவனம், சிதம்பரம், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், பாவநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, ஆகிய இடங்களிலிருந்து வருகைதந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1907ம் ஆண்டு திரு. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களால் நிர்மானிக்கப்பட்ட கல்~அம்பலம் இப்பொழுதும் கெங்கல்லை நகரில் நீங்கள் காணலாம். மேலும் இவ்வருடம் இதன் நூற்றாண்டு விழா கொண்டாட இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



கெங்கல்ல நகருக்கு அண்மையில் அமைந்திருக்கும் பிரதானவீதியில் பழைமை வாய்ந்த கிருஷ்ணர் ஆலயம்

கெங்கல்ல ஸ்ரீ அருளாநாதர் கனநாதர் ஆலயம்

திரு. வைத்தியலிங்கம் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாக்கோட்டை அம்மன் ஆலய
வழிப்பிள்ளையார் கோயில்



அம்பாக்கோட்டை
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
(அம்மன் ~ கோட்டை)

அம்பாக்கோட்டை
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய தோற்றம்



அம்பாக்கோட்டை
ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய முன்தோற்றம்



அம்பாக்கோட்டை மதுரை வீரன் கோயில்



அம்பாகோட்டை மாயவர் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம் உதாவ ஸ்ரீ முருகன் ஆலயம்
பள்ளேகல

பள்ளேகல முத்துமாரியம்மன் ஆலய
வளவில் அமைந்திருக்கும்
முனி, காளி, கருப்புசாமி



பள்ளேகலயில் அமைந்திருக்கும் மிகவும்
பழமை வாய்ந்த முத்துமாரியம்மன் ஆலயம்
(இது பெரிய கோயில் என்றும் அழைக்கப்படும்)

பள்ளேகலயில் வேப்பமரத்தடியில்
அமைந்திருக்கும்
அம்மனும், காளியம்மனும்



பள்ளேகல முத்துமாரியம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் பேர்ட என்பர் முதலில் கம்பளை சிங்காபிட்டியவில் கோப்பிப் பயிர் செய்கையை ஆரம்பித்து வெற்றிகண்டார். இதன்பின் கண்டியில் பரவலாக கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது பள்ளேகலவிலும் கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு வெற்றி கண்டனர்.

கோப்பி தோட்டங்களில் ஹமிரியா வங்தாத்ரி என்ற நோய்பரவியதால் பலகோப்பி தோட்டங்கள் அழிந்தது. எனவே பள்ளேகல தோட்டங்களில் மிளகு, ஏலம், கராம்பு, தென்னை, கொக்கோ, இறப்பர், போன்றன பயிரிட்டனர். வாசனைத்திரவிய கைத்தொழிலுக்கு பெயர்பெற்ற பல்பயிர்த் தோட்டமாக பள்ளேகல தோட்டம் விளங்கி யது. பிற்காலத்தில் இது பள்ளேகல குறூப் என்ற ஒரு பெரிய நிறுவனமாயிற்று பிரித்தா னியர்களே இதனை நிர்வகித்தனர்.

ரஜவல்ல, பலகொல்ல, விக்டோரியா, அம்பங்கோட்டை, அளுத்வத்த, மல்பேரி மாபேரி என பல டிவிஷன்கள் உருவாகின ரஜவல்ல டிவிஷனில் தேயிலைத் தோட்டம் இருந்தது. விக்டோரியா டிவிஷனிலும் தேயிலைத் தோட்டம் இருந்தது. மல்பேரி என்பது மல்பேரி - பட்டுப்பூச்சி வளர்ப்புக்காக மல்பேரி விளைவித்த தோட்டம் மல்பேரி தோட்டமாயிற்று. அம்மன் கோட்டை என்பதே அம்பக்கோட்டையாயிற்று. அம்மன் சக்திமிக்க வழிப்பாடுகள் நடைபெற்ற இடம். இங்கு சிங்கள பெயர் மாற்றத்தினால் அண்மைக் காலமாக இனமுரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியாக உருவான தோட்டம் என்பதால் புதுத்தோட்டம் என பெயரிடப்பட்ட தோட்டமே சிங்கள மொழியில் அளுத்வத்தயாயிற்று.

பள்ளேகல தோட்டம் என்பது பெரிய தோட்டம், கப்பக்காரன் தோட்டம், தாய் இல்லாத பிள்ளை வளர்ந்த தோட்டம் என பல பெயர்களால் அழைக்கப்பட்டது. 1968ம் ஆண்டு இத் தோட்டங்களை அரச பெருந்தோட்ட யாக்கம் பொறுப்பேற்றது, பெரும் வருமானமுள்ளத்தோட்டமாகவும் இருந்தது. 1978ம் ஆண்டு இத்தோட்டத்தினை "நட்சா" நிவனத்தின் கீழ் மாற்றுப்பயிர்ச் செய்கை என்ற திட்டத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

இக்காலத்தில் இதற்கு எதிராக மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெ ற்றது. இலங்கைத் தோட்டத்தொழிலாளர்கள் வரலாற்றில் மிகப்பெரிய போராட்டங்களில் இதுவும் ஒன்று. இரத்தக்களரியுடன் முடிவுற்ற இப் போராட்டத்தில் ஒரு தோட்டத் தொழிலாளி உயிரிழந்தார்.

உயிர்நீத்த தியாகியான தோட்டத் தொழிலாளி பலகொல்ல டிவிஷன் பழநி என்ப வராவார். இவர் தோட்ட காவலாளியாக தொழில் புரிந்தவர், இப் போராட்டசக்தியினால் நிர்வாகமும், அரசும் கோபமடைந்தது, பெருந்தோட்ட அமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் ரஞ்சன் விஜயரத்ன கடமையாற்றினார். இவர் முன்னர் ஒரு தோட்ட சுப்ரீட்டண்டனாகவும், விவசாய அமைச்சின் செயலாளராகவும் இருந்தவர். இத் தோட்ட த்திற்கு வெளியாரை கொண்டு வந்து தொழில் செய்யவும், தமிழ் மக்களின் செறிவை குறைக்கவும் மறைமுகமாக திட்டமிடப்பட்டது. தோட்டம் நஸ்டத்தில் இயங்குவதாக கூறி தொழிலாளர்கள் பலர் வேலைநிறுத்தப்பட்டனர். இராணுவ முகாம்களுக்காக காணி ஒதுக்கப்பட்டன. காணி சீர்த்திருத்தக்குழு காணிகளை கையேற்றது. "கம் உதாவ" மற்றும் பல குடியேற்றத்திட்டங்களை நிறைவேற்றியது. 8 ஏக்கர் காணியில் ஆயுள் வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டது. கொல்ப் மைதானம் விக்டோரியாவில் அமைக் கப்பட்டது. மகாவலி கிராமம், கைத்தொழில் பேட்டை, கிரிக்கட் மைதானம், திருத்துவக் கல்லூரி றகர் மைதானம் ஆகியன அமைக்கப்பட்டதோடு, வீட்டமைப்பு அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார சபைக்கு துண்டாக்கப்பட்ட காணிகள் கையளிக்கப்பட்டு குடியேற்றங்கள் உருவாகின. சர்வதேச பௌத்த நிலையம், மத்தியமாகாண சபை கட்டிடம் ஆகியனவும் இங்கேயே அமைக்கப்பட்டது. அத்தோடு துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தினால் துண்டாக்கப்பட்ட குறூப் மேலும் பல பாகங்களாகியது. தெல்தெனிய நகரம் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட இழப்புக்கு பதிலாக பாடசாலை, கோயில், பள்ளிவாசல், பலகொல்ல முஸ்லீம் வித்தியாலயம், வீடுகள், பொது ஸ்தாபனங்கள் இந்த குறூப்பலேயே பலகொல்ல டிவிசனில் நிறுவப்பட்டன. குண்டசாலை தேர்தலை நிர்ணயிப்பது தமிழ் வாக்குகளாக இருந்ததனை அவதானித்தே மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இன்று இங்கு இப்படி ஒரு குறூப் தோட்டங்கள் இருந்ததற்கு அடையாளமே இல்லாமல் போயிற்று. தொழிற்சாலை, சுப்ரீன்டன் வீடு ஆகியன இராணுவ முகாமாகின. இப்பகுதியில் திரையரங்காக தமிழ் திரைப்படங்களை வெளியிட்டுவந்த "சாம்பன்" தியேட்டர் கூட நீர்தேக்கத்தால் மூடப்பட்டது, கம் உதாவவுக்காக 1988ஆம் ஆண்டு காணிகள் கையேற்ற போது லயக் காம்பராக்களும், காணிகளும் பிரித்தாளப்பட்டது.

இவ்வளவு செய்தும் எஞ்சியிருந்த 272 ஏக்கர் காணிகளில் 71 ஏக்கரை வீட்டமைப்பு அதிகார சபை பொறுப்பேற்று பிரித்து விற்றது. 15 ஏக்கர் லேவெல்ல, தெய்யன்னவல, நாகஸ்தென்ன ஆகிய இடங்களில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. 1997 ல் நிர்வாக சேவையாளர் சங்கத்திற்கு 15 ஏக்கர் காணி வழங்கப்பட்டு 140 நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது. ஆயோஜனகம, குருகம்மான, மகாவலிதென்ன, துருசவிகம, ஜயசிரி உயன, ஜயசிரி செவன, பெதும் உயன, பொலிஸ் வீட்டமைப்பு திட்டம், மிருக காட்சி சாலைக்கு ஒதுக்கப்பட்டகாணி, கண்டி மகியாவ நகரசுத்தி தொழிலாளர்களுக்கான வீட்டமைப்பு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணி என பல்வேறு திட்டங்கள் இந்த குறூப்பிலேயே நிறைவேற்றப்பட்டு மிகுதியை இத்தோட்ட லயங்களில் குடியிருந்த 216 குடும்பத்திற்கு 20 பேர்ச்சஸ் காணியும், 120 இணைந்த குடும்பங்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியும் வழங்கினர். கண்டி தமிழ் மகாவித்தியாலயம் பள்ளேகலவில் அமைப்பதற்காக பள்ளேகல தமிழ் வித்தியாலயம் (வாணி த.வி) அண்மையில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இதுபோலவே செனரத்கம, தும்பரைத்தென்ன, அநுரகம போன்றனவும் உருவாகியுள்ளது.

இப்பகுதிக்கு கடைத்தெருவாக கெங்கல்ல மட்டுமே அக்காலத்தில் இருந்தது, தற்போது நத்தரம்பொத்த தொடக்கம் திகன வரை நகரமயமாகியுள்ளது. குண்டசாலை புதியநகரம், திகன புதியநகரம் என்பன விக்டோரியா திட்டத்தினால் உருவான நகரங்களாகும். இதேபோல் தனியார் நிறுவனங்களும் வரலாயின. அந்தவகையில் வந்த தனியார் முயற்சிகளினாலேயே பலகொல்ல நகரம் உருவாக்கப்பட்டுள்ளது.

தோட்ட உரிமையாளரான தமிழர்களினால் இப்பகுதியில் சிறப்பான பொது சேவைகள் செய்யப்பட்டுள்ளன. கெங்கல்ல "கல் அம்பலம்" என அழைக்கப்படும் கருங்கல்லினாலான "அம்பலம்" தமிழனினால் கட்டப்பட் டுள்ளது. இன்னும் இது சாட்சி பகர்தின்றது. 1860 களில் இலங்கை வந்து இங்குவாழ்ந்த வைத்திலிங்கம்பிள்ளை என்பவரே இதனை கட்டி 1907 ஆம் ஆண்டு திறந்து வைத்துள்ளார். இவரது குடும்பமே கெங்கல்ல தமிழ் வித்தியாலயம் கட்டுயுள்ளனர்.

கண்டியிலிருந்து ஊருகொல்ல, ரங்கல, உன்னஸ்கிரிய, உடிஸ்பத்துவ, முருகா மலை (முருகன் மலை), மகியங்கன ஊடாக மொனராகல, ஊவா, மற்றும் போப்பிட்டிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப் பிள்ளையார் கோயில் மாபேரிதென்ன
ஸ்ரீ கதிரேச பெருமான் ஆலய வளவில்

மாபேரிதென்ன வேல் குத்தும் இடம்



மாபேரிதென்ன அம்மன் கோயில்





செனரத்வெல ஸ்ரீ முருகன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மலை சாமி என்று தெல்தெனியாவில் பரம்பரை பரம்பரையாக
பூசை செய்துவந்த குடும்ப ஆலயம்
விக்டோரியா திட்டத்தின் கீழ் குடியேற்றத்தில் அலுத் வத்தையில் அமைக்கப்பட்டுள்ளது
300 வருடம் பழமை வாய்ந்தது.



அலுத்வத்தை
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தோற்றம்

அலுத்வத்தை இராமர் கோயில்

1987 இல் தெல்தெனியா V.C
கொள்ளாளர்களாள் புலம் பெயர்ந்து
குடி அமர்ந்த பின்பு அலுத்வத்தை 8 நம்பர்,
கோட்டத்தில் நிறுவப்பட்ட ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்தெனிய ஆகிய பகுதிக்கு செல்லும் தொழிலாளர்கள் கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் செல்லும் போது இங்கு தங்கி செல்வதாலேயே இந்த அம்பலம் கட்டப்பட்டுள்ளது. இந்த இடம் சிங்களத்தில் கொங்கால்ல கொங்-மாடு சாலா-சாலை, கால்ல-மாடுகட்டுமிடம் என அழைக்கப்பட்டு பின்னர் "கெங்காலை" எனவும் கூறப்பட்டு இப்பொழுது "கெங்கல்ல" என அழைக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த இப்பகுதி இன்று தமிழர் எச்சங்கள் மட்டும் மிஞ்சியுள்ள நிலையிலேயே தமிழையும், சைவத்தையும் நிலைநிறுத்த பலகொல்ல சைவமுன்னேற்றச் சங்கம் போன்ற அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

காமன் கூத்து, கோயில் திருவிழாக்கள், தீமிதிப்பு, பறவைக்காவடி, கரகம், காவடி போன்றன இத்தோட்டங்களில் சிறப்பாக மேற்க்கொள்ளப்பட்டுள்ளன. இப்பகுதி நாட்டாரியல் வாய்மொழி பாடல் ஒன்றில்.

"மானிருக்கும் புதுத்தோட்டம்
மயிலிருக்கும் அம்பாகோட்டே
தேனிருக்கும் ரசவளையாம்
தேடிப்போவோர் கோடிப்பேரு"

எனக் கூறப்பட்டுள்ளது.

அரச காலத்தின் பின் பிரித்தானியர் ஆட்சி காலத்தில் தோட்டங்கள் உருவாக்கி வாழ்ந்த காலத்தில் இப்பகுதியில் பண்ணைத் தொழிலிலும், தனியார் தோட்டங்களை வைத்து பராமரித்தும் வாழ்ந்த தமிழர்கள் பலர் சிறந்த நிலையில் இருந்துள்ளனர்.

இங்கு தேவையான புல் நிலங்கள் அதற்கான சுவாத்தியம் இருந்ததனாலேயே மாடு வளர்ப்பு சிறப்பிடம் பெற்று விளங்கியுள்ளது. தனியார் தோட்ட மாடுவளர்ப்பு மற்றுமின்றி தோட்ட தொழிலாளர்களும் மாடுகள் வளர்த்ததினாலேயே பள்ளேகலவில் தேசிய பால் சபை நிறுவப்பட்டிருந்தது. நீர்தேக்கத்தினால் அதுவும் மூடப்பட்டது. கன்னோருவ போன்றே இங்கும் விவசாயத்திற்கேற்ற சூழல் காலநிலை தன்மை காணப்படுவதால் விவசாய கல்லூரி இங்கேயே அமைக்கப்பட்டது. குண்டசாலை விவசாய கல்லூரி நிலம் நீண்டகாலமாகவே மன்னர் காலம் தொட்டு விவசாயத்திற்கு உட்பட்ட இடமாகும்.

ஒருபுரம் மகாவலி மறுபுரம் பாதுகாப்பான வளமான நல்ல சுவாத்திய மான பல்லின பயிர்செய்கை நிலத்தைக் கொண்ட தோட்டம் என்பதால் திறந்த வெளி சிறைச்சாலையும் இங்கயே அமைந்துள்ளது. இதன் நோக்கம் கைதிகளிடையே விவசாயத்தினை பழக்கு வது மூலம் எதிர்காலத்தில் வாழ்வுமுறை ஒன்றினை அமைத்துக்கொடுத்தல் ஆகும்.

தனியார் தோட்ட உரிமையாளராகவும், தனியார் பண்ணை உரிமையாளராகவும் தமிழர் சிலர் இத்தொழிலில் ஈடுபட்டுவந்த போது 1930 இல் கண்டி மாவட்டத்தில் பல தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டது. பல புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1949 குடியுரிமை பறிக்கப்பட்டது. 1964ல் பிரஜாஉரிமை ஒப்பந்தத்தினாலும், 1972 தோட்ட உச்சவரம்பு சடத்தின் கீழ் தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டதனாலும், குடியேற்றத் திட்டங்களினாலும் பல தொழிலாளர்கள் மீண்டும் இந்தியா சென்றனர்.

1977, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் மேலும் பலர் இந்தியா சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தோட்டத் தொழிலாளர் வரலாற்றில் 1907 ஆம் ஆண்டு ஒரு முக்கிய திருப்பு முனையாகும் அவ்வருடமே தோட்டபாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, சில தனியார் முயற்சியினாலும், தமிழ்த்திருச்சபை மிஷனாலும் மிவுனரிபாடசாலைகள் ஆரம்பி க்ப்பட்டுள்ளன. இவற்றை தோட்ட பெரியகங்காணிகளும், இந்திய தமிழ் நாட்டு திருநெல்வெலியிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் கொண்டுவரப்பட்ட ஆசிரியர்க ளினாலும் நடத்தப்பட்டுள்ளன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் அம்பாக்கோ ட்டை, மாபெரி தென்ன, விக்டோரியா, பள்ளேகல, ரஜவல, கெங்கல்ல த.வி, குண்ட சாலை த.வி ஆகியனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை இன்று கல்விக்கூடங்களாக திகழ்வதோடு பள்ளேகல த.வி. வாணி த.வி. எனவும், குண்டசாலை த.வி. விவேகானந்தா த.வி. எனவும் பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

அரசபெருந்தோட்ட யாக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின் இத்தோட்ட பாடசாலைகளை மிஷனரியிடமிருந்து பொறுப்பேற்றுள்ளது. பின்னர் 1977-1998 வரை 721 தோட்டப் பாடசாலைகள் அரசாங்க கல்வி அமைச்சு மூலம் அரச பாடசாலையாக்கப்பட்டபோது இவையும் அரசபாடசாலைகளாயின. தெல்தெனியா விக்டோரியா நீர் தேக்கத்தில் மூழ்கிய போது சிதம்பரம் தமிழ் வித்தியாலயமும் அழிந்தது. அதற்கு மாற்றீடாக அம்மாணவர்கள் ரஜவல தமிழ் வித்தியாலயத்திற்கு உள்வாங்கப்பட்டடு ரஜவல மகாவித் தியாலயமாயிற்று. இன்று இது தேசிய பாடசாலையாக திகழ்கிறது.

கண்டி மாநகரில் ஒரு தமிழ் மகா வித்தியாலயம் இல்லாமையினால் 40 வருடங்களாக ஒரு தமிழ் மகா வித்தியாலயத்தினை பல்வேறு அமைப்புகளும், அரசியல் வாதிகளும், கல்விநிறுவனங்களும் கோரிவந்துள்ளன. இதற்கு மாற்றீடாக பள்ளேகலவில் 09.02.1996 அன்று அப்பொழுது மத்திய மாகாண முதலமைச்சராக விருந்த பி.பீ. திஸாநாயக்கவினால் மகாவித்தியாலயம் ஒன்றினை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இது பிற்காலத்தில் பள்ளேகல வாணி த.வி. க்கென ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் பள்ளேகல த.வி. புதிய கட்டிடத்திற்கு இடமாறினர் அது போல கெங்கல்ல த.வி. ஆரம்ப பாடசலையானது.

கோயில்கள் வழிப்பாடுகளைப் பொறுத்தவரையில் மாரியம்மன் வழிப் பாடே இங்கு சிறந்து விளங்குகின்றன. பள்ளேகல குறூப் சகல டிவிசன்களிலும் மாரியம்மன் கோயில்கள் உண்டு. இவை தவிர தெல்தெனிய நகரம் மூழ்கியதால் அதற்காக இடம் ஒதுக்கப்பட்டு பலகொல்லவில் புதிய மாரியம்மன் கோவிலும், மல்பேரி தோட்டம் கைத்தொழில் பேட்டையானதால் அவர்கள் ஆயோஜனகம என்ற புதிய கிராமத்திற்கு குடிபெயர்ந்ததனால் ஆயோஜனகம அம்மன் கோயில்லும் புதிதாக அமைந்தன. கெங்க ல்ல அம்மன் கோயில், பள்ளேகல பெரிய அம்மன் கோயில், அம்பாக்கோட்ட அம்மன் கோயில் ஆகியன பழைய கோயில்களாகும். இவை தவிர "கம உதாவ" அமைந்தவிட த்திலிருந்த முருகன் கோயில் கம் உதாவ திட்டத்துடன் மீள் நிர்மானித்துக் கொடுக்க ப்பட்டது. கெங்கல்ல கிருஷ்ணன் கோயில், பள்ளெகல பிள்ளையார் கோயில் போன்ற னவும் இப்பகுதியில் அமைந்துள்ள கோயில்களாகும். இங்கு சிறுதெய்வ வழிப்பாட்டு கோயில்களும் காணப்படுவதோடு, முனியாண்டி கோயில்கள், வைரவர் வழிப்பாட்டு இடங்கள் பல அக்காலம் தொட்டு காணக்கூடியதாகவுள்ளன. ஆலமரம், வில்வமரம் ஆகியவற்றின் கீழ் "கல்" ஒன்றினை, வேல் ஒன்றினை, சூலாயுதம் ஒன்றினை, வாள் ஒன்றினை வைத்து வழிப்படும் பல இடங்கள் உண்டு. இங்கு பழிபூசை, தீமிதிப்பு, கரகம் பாலித்தல், பால்குடம் எடுத்தல் போன்றனவும் இடம் பெறுகின்றன. மதச்சடங்குகளும் கோயில் திருவிழாக்களும் தொடர்ந்தும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாகோட்டை மாடசாமி கோயில்

அம்பாகோட்டை பண்டாரத்து ஐயா கோயில்



திகனை நகரில் அமைந்துள்ள
ஸ்ரீ காளியம்மன் கோயில்



திகனை
ஸ்ரீ காளியம்மன் கோயில் (பழையது)

பலகொல்ல
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வெளித்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. சங்கரப்பிள்ளை பொ. நாம் தமிழர். கொழும்பு, கொழும்பு தமிழ் சங்கம் ; 1979

2. புவாஜி. ஏ.ஏ.எம். மாத்தளை மாவட்டத் தமிழர் வரலாறும் பாரம்பரியமும், மத்தியமாகாண சாகித்திய விழா மலர் - 2001, மத்திய மாகாண கல்வி அமைச் ; 2001

3. ஹஸன் எஸ்.எம்.எ. கண்டி மாவட்ட தமிழர்கள் சில வரலாற்றுப் பதிவுகள் : கண்டி மாவட்டத்தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள், சாகித்தியவிழா மலர் மத்தியா மாகாண சபை :- 2002

4. Culavamsa (ed) W. Geiger, Landon ;1975

5. Karunaratna, Nihal, Kandy Past and present; central cultural fund, ministry of religious and cultural aff airs ; 1999

6. Maha vamsa (ed) withelm Geiger ; Colombo ; 1950

7. Medis G.C. : Early history of Ceylon, Y.M.C.A. Publishing House, Calcutta, ; 1948

8. Peiris,Gerold: Kalapura:The Colony of Craftsmen in patha-Dumbara; [ ]

9. Year book of the planter's Association of Ceylon (Kandy) for the year - 1943

10. සිංහල වශ්ව කෝෂය (7th Addition) Govt Publication ; 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல கிராமத்தின் சமூக வாழ்வியற் வரலாற்றுப் பண்புகள்

ரா. நித்தியானந்தன்
B.A. (Hons), M.Phil (Political Science)
ஆசிரியர் "சிறகு" .com

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் செறிந்து வாழும் பலகொல்லை கிராமமானது கண்டி மாவட்டத்தில் கண்டி நகரின் வடகிழக்கு திசையில் 11 கி.மீ தூரத்தில் அதன் புறநகர் பகுதியாகிய திகனை நகருக்கு அண்மையில் அமைந்துள்ளது. கண்டி, மஹியங்கனை பிரதான பாதை இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது.

1984ம் ஆண்டுக்கு முன்னர் இக்கிராமம் பள்ளேகளை என்று அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கியது. 1983ம் ஆண்டு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெல்தெனிய, குண்டசாலை, நத்தரம்பொத்த ஆகிய கிராமங்கள் நீரில் மூழ்கியபோது அவ்விடங்களில் வாழந்த மக்களுக்கு இங்குள்ள நிலங்ளைப் பகிர்ந்து அளிப்பதற்காக அப்போதைய ஐ.தே.க அரசாங்கம் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திடம் இருந்து இத்தோட்டத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது. மேற்படி அத்திட்டத்தின் கீழ் தெல்தெனிய, குண்டசாலை, நத்தரம்பொத்த ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்கு அவர்களின் சுயதெரிவின் அடிப்படையில் ஒவ்வொன்றும் 30 (முப்பது) பர்ச்சஸ் அமையுமுகமாக காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் விவசாய நெற்காணிகளைப் பெறவிரும்புவோருக்கு உலர்வலயப் பிரதேசமாகிய ம ஹியங்கனைக்கு அண்மையில் அமைந்துள்ள ஹுல்ஹிட்டியாவ (Halhitiyawa) எனும் இடத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்புள்ள காணிகள் வழங்கப்பட்டன. சிறு பயிர்செய்கை நிலங்களை விரும்பியோருக்குத் திகனை நகருக்கு அண்மையில் அமைந்துள்ள அளுத்வத்தை என்ற இடத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1 ஏக்கர் காணி வீதம் தென்னங்காணிகள் வழங்கப்பட்டன. பலகொல்ல பெருந்தோட்டப் பிரிவில் நிரந்தரமாக வாழ்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 40 ச.வீதமானோருக்கு அம்பாகொட்டை என் இடத்தில் ஒவ்வொருவருக்கும் 20 பேர்சஸ் காணித்துண்டுகளும் ஏனையோருக்கு பலகொல்லை கிராமத்தில் 7 பேர்சஸ் காணிகளும் வழங்கப்பட்டன.

குண்டசாலை தேர்தல் தொகுதியில் புதிதாக (1984) அமைவிடம் பெற்றுள்ள பலகொல்லை கிராமமானது, குண்டசாலை பிரதேச சபைக்கு உட்பட்டது. பலகொல்ல கிராமத்தைப் பராமரிக்கும் பிரதேச செயலக காரியாலயம் இங்கிருந்து 6 கிலோமீட்டர் தொலைவிலுள்ள "மெனிக்ஹின்ன" என்ற நகரில் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்கள் தொடர்புகொள்ளத்தக்க பிரதான மக்கள் வங்கி, பொலிஸ் நிலையம். வைத்தியசாலை என்பன மேற்படி நகரில் அமைந்துள்ளன. இக்கிராமத்தை அண்மியதாக அளுத்வத்தை, அம்பாகொட்டை, பள்ளேகளை, குருதெனிய, நத்தரம்பொத்த, குண்டசாலை, மெனிக்ஹி ன்ன. மாவத்த கம கெங்கல்லை ஆகிய கிராம சேவக பிரிவுகள் இயங்குகின்றன. மெனிக்ஹின்ன, குண்டசாலை, திகனை ஆகிய நகரங்கள் இக்கிராமத்தை அண்டிய நகரங்களாகும். இதைத் தவிர ரங்கலை, டக்வாரி ஆகிய தேயிலைத் தோட்டங்கள் இக்கிராமத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பெருந்தோட்டங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைப்படம் 5.1 பலகொல்ல கிராமத்தின் புவியியல், சமூகப்பின்னணி



- பிரதான பாதை.
- சிறு வீதி.
- குடியிருப்பு (ஒரு புள்ளி ஒரு குடும்பத்தினை மனையைக் குறிக்கும்)
- சிறுவியாபார நிலையம்.
- விளையாட்டு மைதானம்.
- நீரோடை.
- செஞ்சிலுவைச் சங்க காரியாலயம்.
- கைத்தொழில் அபிவிருத்தி நிலையம்.
- நீர் விநியோக தாங்கி.
- வனவள அரச காரியாலயம்.
- பாலம்
- பௌத்த விகாரை.
- முஸ்லிம் பள்ளி.
- RB கிராமிய மக்கள் வங்கிக்கிளை.
- SB சனச வங்கி.
- கூட்டுறவு வங்கிக்கிளை.
- 5 முஸ்லிம் பாடசாலை.
- தனியார் வாடிவீடு.
- P.S பிரஜா சாலாவ.
- உபதபால் நிலையம்.
- கிராம எல்லை.
- கிராம சேவகர் பிரிவு.
- இந்து கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 5.1

மக்கள் தொகை - பலகொல்ல கிராமம்.

இனப்பிரிவு	சனத்தொகை	குடும்பங்கள்
சிங்களவர்.	3380	402
தமிழர்.	1050	354
முஸ்லிம்கள்.	1570	307
ஏனையோர்	108	18
மொத்தம்	6108	1081

மூலம் : பலகொல்ல கிழக்கு மேற்கு கிராமசேவகர்களிடம் பெறப்பட்டது (1999)

அட்டவனை - 5.2

மதப்பிரிவினர் - பலகொல்ல கிராமம்

மதப்பிரிவு	மதத்தினரின் தொகை
பௌத்தர்	3272
இந்துக்கள்	1050
இஸ்லாமியர்	1570
கிறிஸ்தவர்	108
ஏனையோர்	12

மூலம்: பலகொல்ல கிராமசேவகரிடம் பெறப்பட்டது (1999)

வரைபடம் - 5.2
இனபிரிவினர் - பலகொல்ல



வரைபடம் - 5.3
மதப்பிரிவினர் - பலகொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி அட்டவணையும், வரைபடமும் பலகொல்ல கிராமத்தின் மூவினங்களும் கலந்து வாழ்வதைக் காட்டுகின்றன. அதுபோல மதப்பிரிவினர் தொடர்பான வரைப்படமானது இதே பண்பினைக் கொண்டதாகும்.

பலகொல்ல கிராமத்தில் இந்திய வம்சாவளி தமிழரைப் பொறுத்தவரை 354 தமிழ் குடும்பங்கள் பதிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர்களாக. வாழ்கின்றனர். இவர்களில் 80 வீதமானவர்கள் தெல்தெனிய, நத்தரம்பொத்தை, குண்டசாலை ஆகிய பிரதேசங்களில் இருந்து சுய விருப்பின் அடிப்படையில் இங்கு குடியேறியவர்களாவர். இங்குள்ள சகல (100%) இந்தியத் தமிழர்களும் குடியுரிமை பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் 1964 1974ம் ஆண்டுகளின் பிரஜாவுரிமை ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் 1986, 1988ம் ஆண்டுகளின் சட்ட ஏற்பாடுகளின் கீழும் குடியுரிமை பெற்றுள்ளனர்.

இக்கிராமத்தில் ஒரு பௌத்த தேவாலயம், ஓர் இந்துக்கோவில், ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் என்பன காணப்படுகின்றன (வரைபடம் - 5.1) இவ்வழிபாட்டுத் தளங்களைச் சூழவே இவ்வினங்களைச் சார்ந்த குடியிருப்பாளர் செறிவாக வாழ்கின்றனர். ஆனால் இங்குள்ள தமிழர்களில் பெரும்பான்மையானோர் கண்டி நகரிலுள்ள இந்துக் கோவில்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் நாடிச்செல்கின்றனர். இதேசமயம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இக்கிராமத்திலுள்ள முத்துமாரியம்மன் கோவிலையும், திகனை நகரிலுள்ள காளியம்மன் கோவிலையும் நாடிச்செல்வர். இங்குள்ள பிறிதொரு சிறப்பம்சம் சிங்களவர்களில் அநேகமானோர் பலகொல்லைக் கோவிலுக்குச் செல்வதாகும். இக்கிராம மக்கள் தொழில், வர்த்தகம், வங்கி நடவடிக்கை, தபால், தந்திச் சேவை, வைத்தியசாலை, மின்சாரப் பராமரிப்பு, நீர் விநியோகம், தொலைபேசி பரிவர்த்தனை போன்ற நடவடிக்கைகளுக்காக திகனை, கண்டி ஆகிய நகரங்களிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களை நாடிச்செல்கின்றனர்.

மேற்படி படத்தில் காட்டப்பட்டவாறு (படம் இல. 5.1) இக்கிராமத்தை "ஊடறுத்துச்" செல்லும் பிரதான ஒரு மக்கள் வங்கிக் கிளை, கூட்டுறவு வங்கிக் கிளை, உப நூல் நிலையம், சனச வங்கி, பிரஜா சாலாவ (குடியிருப்பாளர் மண்டபம்), செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயம் என்பன காணப்படுகின்றன. இத்துடன் முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் குடியிருப்பையொட்டி ஒரு முஸ்லிம் பாடசாலை அமைந்துள்ளது. பலகொல்ல கிராமத்தின் தமிழ் மாணவர்கள் திகனை - ரஜவெல்ல இந்து தேசிய கல்லூரி, மற்றும் கெங்கல்லை, குண்டசாலை தமிழ் வித்தியாலயங்களுக்குச் செல்கின்றனர். வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் கண்டி நகரிலுள்ள அரச மற்றும் தனியார் கல்லூரிகளில் (திரித்துவக் கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி, உயர்தர மகளிர் பாடசாலை, நல்லாயன் மகளிர் கல்லூரி, புனித சில்வெஸ்டர் கல்லூரி, மோப்ரே கல்லூரி, அசோகா வித்தியாலயம்) கல்வி கற்கின்றனர். இதுபோல இங்குள்ள முஸ்லிம், சிங்கள மாணவர்களும் மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர குறிப்பிட்ட மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் திகனை, கண்டி நகர்களில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயில்கின்றனர்.

பலகொல்ல கிராமத்தில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ்க் குடியிருப்பாளர்களை இரண்டு பிரதான பிரிவுகளுள் அடக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1984ம் ஆண்டின் பின் குடியேறிய பெருந்தோட்டம் சாரா

2. பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் (1984ம் ஆண்டின் பின் இவர்கள் பெருந்தோட்டம் சாராத தமிழர்களாக மாறியுள்ளனர்.)

இக்கிராமத்தில் வாழும் இந்தியத் தமிழர்கள் அனைவரையும் அவர்கள் ஆற்றும் தொழில் தன்மையின் அடிப்படையில் ஐந்து பிரதான பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் :-

(அ) எழுதுவினைஞர்கள், நிறைவேற்று உத்தியோகத்தர்கள் வங்கியாளர், முகாமையாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர், கணனி இயக்குனர்கள்.
(ஆ)பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள்
(இ) தொழில் நுட்பவியலாளர்கள், திறன்சார் ஊழியர்கள், தாதிமார்
(ஈ) பியன்கள், ஏனைய சிற்றூழியர்கள்.

2. வர்த்தகத்துறைச் சார்ந்தோர்

(அ) வியாபாரிகள் (சிறு கடைக்காரர்கள் - புடவை, நகை, நுகர்வு பொருட்கள், விளையாட்டு, அலங்காரப் பொருட்கள், சுவர் பூச்சு, சப்பாத்துக்கடை, பழைய இரும்புக்கடை, பெட்டிக்கடை என்பன)
(ஆ)மொத்த வியாபாரிகள்
(இ) தரகர்கள்

3. சுயதொழில் முயற்சியாளர்கள் (கருப்பட்டி, ஊதுபத்தி, பற்பொடி, சீமெந்து, கற்கண்டு, குங்குமப்பொட்டு, பப்படம், பயிற்சிபுத்தகங்கள், தையற்தொழில்புரிவோர்.)

4. சிறிய நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் (நிலங்கள் பலகொல்லைக்கு வெளியே.)

5. தொழிலாளர் வகுப்பினர்.

மேற்குறிப்பிட்டவர்களில் அரச மற்றும் தனியார்த்துறைகளில் உத்தியோகம் புரிவோர் கண்டி, மாத்தளை, திகனை, கொழும்பு ஆகிய இடங்களில் பெரும்பாலும் தொழிலாற்றுகின்றனர். ஆசிரியர்கள், அதிபர்கள், திகனை, கெங்கல்லை, கண்டி, ரங்கலை ஆகிய இடங்களில் பெரும்பாலும் தொழிலாற்றுகின்றனர். இங்குள்ள பெரும்பாலான சிறு வர்த்தகர்களின் வியாபார நிறுவனங்கள் கண்டி, மாத்தளை, திகனை, பொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

பலகொல்ல கிராமத்தினுள் அமைவு பெற்றுள்ள வர்த்தக நிறுவனங்கள் சிங்களவர், தமிழர்,முஸ்லிம்கள் என்ற மூவினத்தவர்க்கும் சொந்தமானதாகும். அவை பின்வருமாறு :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.3

பலகொல்ல கிராமத்தின் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்கள்:

	இந்தியத்தமிழர்	சிங்களவர்	முஸ்லிம்கள்
பலசரக்குக் கடைகள்	6	6	4
இரும்புக் கடைகள்	7	0	0
மொத்த வியாபாரம்	0	2	0
காய்கறிக் கடை	0	3	0
முடித்திருத்தும் நிலையம்	0	1	0
சுயதொழில் வியாபாரம்	12	6	0
தையல் நிலையம்	3	4	1
பாலர் பாடசாலை	2	3	2
நகை செய்வோர் (ஆசாரி)	1	0	0
வைத்திய நிலையம் (தனியார்)	0	2	0
வானொலி/தொலைக்காட்சி திருத்துவோர்	0	1	0
மொத்தம்	31	28	7

மேற்படி அட்டவணையிலிருந்து இக்கிராமத்தில் இந்தியத் தமிழர் சார்ந்த நடுமட்ட வர்த்தகத்தினர் பல்வேறு துறைகளில் வளர்ச்சிபெற்று வருவது தெளிவாகிறது. இவர்கள் பெரும்பாலும் பெருந்தோட்டங்களிலிருந்து இரண்டாம் மூன்றாம் தலைமுறையினராக பலகொல்லையில் குடியேறியவர்கள்.

பலகொல்ல கிராமத்தில் குடியேறிய மக்கள் முன்னர் பெருந்தோட்ட மக்களாக இருந்து பின்னர் பல்வேறு காரணங்களினால் சமூகப் பெயர்வினை அடைந்து வந்துள்ளனர். பெருந்தோட்டங்களிலிருந்து தெல்தெனிய, குண்டசாலை ஆகிய இடங்களிலேயே இவர்களின் ஆரம்ப குடியமைவு இடம்பெற்றது. இவ்வாறு குடியேறிய வர்களுக்கு தெல்தெனிய, குண்டசாலை பகுதிகளில் சொந்த வீடும் ஆல்26 ஏக்கர் வரையிலான காணிப்பரப்புகள் காணப்பட்டன. சிலர் வாடகை வீடுகளிலிருந்து பின்னர் பலகொல்ல கிராமத்தில் குடியேறியுள்ளனர். 15 சதவீத குடும்பங்கள் கண்டி மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து இங்கு வந்து குடியமர்ந்துள்ளனர். இவர்கள் சிங்களவர், முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளை கொள்வனவு செய்துள்ளனர்.

பலகொல்ல கிராமத்தை மிக அண்டிய பிரதேசத்தில் (படம் 5.1)

1. கண்டி புடவைக் கைத்தொழில் நிறுவனம் (Kandy Textile Industry)
2. கண்டி கைத்தொழில் வலையம் (Kandy Industrial Zone)
3. கண்டி கைத்தொழில் முதலீட்டு சபை (Board of Investment -Kandy)
4. ஆடைத் தொழிற்சாலைகள் (Textile Industries)

என்பன காணப்படுகின்றன. இவற்றில் பலகொல்ல கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலான சிங்களவர், தமிழர்கள் இடைக்கீழ்மட்ட தொழில்களைப் புரிகின்றனர்.

வீடமைப்பைப் பொறுத்தவரை 100 சதவீதமான வீடுகள் இங்கு புதிதாகக் கட்டப்பட்டவை. தொழிலாளர்களின் 2 லயன் வீடுகள் மாத்திரம் இன்றும் அதே பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலுள்ளன. இங்குள்ள வீடுகள் அனைத்துக்கும் அநேகமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது (92.2%) 15 சவீதமான இந்தியத் தமிழர்களின் வீடுகளுக்குத் தொலைபேசி வசதி உண்டு. இங்குள்ள தமிழர்களில் 20 சதவீதமானவர்கள் வங்கிக் கடன்களைப் பெற்று தமது வீடமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். தொழிலாளர்களையும் சேர்த்து கணிக்கும்போது 100 சதவீதமானவர்கள் எழுத்தறிவுள்ளவர்களாகவும் 80 சதவீனோர் கல்வியறிவு பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

5.2 இனமும் தனித்துவமும்

பலகொல்ல கிராமத்தில் வாழுகின்ற தமிழர்களில் 99% வீதமானோர் இநதியு வம்சாவளித் தமிழர்களாவர். திருமண உறவுகளின் காரணமாக மிகக் குறைந்த வீதத்தினர் (5%) சிங்களவர்களில் கலந்துள்ளனர். நுவரெலிய, பதுளை, கண்டி ஆகிய மாவட்டத்தின் மாதிரி எடுப்களில் பெறப்பட்ட புள்ளி விபரங்கள் பலகொல்ல கிராமத்துடன் ஒப்பிடும்போது சிங்களவர்களாக மாறிய தமிழரின் குறிகாட்டிகள் கீழ்வருமாறு அமைகின்றது.

பலகொல்லையும் ஏனைய மூன்று மாவட்டங்களிலும் பிறஇனத் திருமணம்

இனங்கள்	கண்டி	நுவரெலிய	பதுளை	பலகொல்ல
1. தமிழர் சிங்களவர்களை மணமுடித் துள்ளோர்	06 ச.வீ	01 ச.வீ	1.5 ச.வீ	0.5 ச.வீ
2. தமிழர் முஸ்லிம்களை மணமுடித்துள்ளோர்	02 ச.வீ	-	-	0.7 ச.வீ

பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 12 சதவீதமானோர் மத அடிப்படையில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளனர். ஆனால் இது இவர்களின் இனத்தனித்துவத்தைப் பாதிக்கவில்லை. காதல் திருமணம், பொருளியல் காரணிகள் என்பன இவ்வினமாற்றம் அல்லது மதமாற்றம் இடம்பெறுவதற்கு அடிப்படையான காரணங்களாகும்.

ஆனால் இன்று இந்நிலையிலிருந்து சமூகப் பெயர்வினை அடைந்துவந்துள்ள தொழிலாளர்களின் பிள்ளைகள் ஆசிரியர் தொழில், அரசங்க எழுதுவினைஞர் தொழில், பெருந்தோட்ட உத்தியோகம், சுயதொழில் வேலை வாய்ப்பு, வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டு படிப்படியாக இத்தோட்டங்களிலிருந்து விலகி நகரம் அல்லது கிராமங்களில் தமது சொந்தக் குடியிருப்புகளை அமைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அவ்வாறான வாழ்க் கைச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொண்ட அவர்கள் இந்த புதிய கிராமிய நகர சமூகத்தோடு ஒருங்கிணைந்து வாழ விரும்புகின்றனர். பலகொல்ல கிராமத்தின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினரிடையே இந்நிகழ்வுகள் இடம்பெற்று வருவதைத் தெளிவாகக் காணலாம். கண்டி, நுவரெலிய, பதுளை ஆகிய பிரதேசங்களில் பெறப்பட்ட மாதிரி எடுப்புக்களிலும், கூட இதனை மிகத் தெளிவாகக் காணலாம். எனவே ஒப்பீட்டு அடிப்படையில் மேற்குறித்த மூன்று மாவட்டங்களிலும், பலகொல்லயிலும் கீழ் மத்தியதர வர்க்கம் சார்ந்த சொந்தக் குடியிருப்பாளர் வீதமும் வாடகை குடியிருப்பாளர் வீதமும் கீழ் வருமாறு அமைகிறது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் - 5.4
பலகொல்ல கிராமத்தில் மூன்று மாவட்டங்களிலும் சொந்தக் குடியிருப்பாளர் வாடகை குடியிருப்பாளர் விகிதாசாரம்.



வரைபடம் 5.4 இன் படி பலகொல்ல கிராமத்துடன் ஒப்பிடும்போது மேற்படி மூன்று மாவட்டங்களின் முடிவுகள் பலகொல்ல கிராமத்திலிருந்து வேறுபடுவதை இக்குறிகாட்டிகள் காட்டுகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் பலகொல்ல கிராமத்தில் பெரும்பாலான குடியிருப்பாளர்கள் தெல்தெனிய, குண்டசாலை பகுதிகளில் சொந்தக் குடியிருப்புகளில் வாழ்ந்து வந்தவர்கள். இப்பகுதிகளில் வாழ்ந்த சொந்தக் குடியிருப்பாளர்களுக்கும், வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் பலகொல்லயில் சொந்தக் காணித்துண்டுகள் வழங்கப்பட்டன. ஆனால் மேற்குறித்த மூன்று மாவட்டங்களிலும் பெருந்தோட்டங்களிலிருந்து நகரங்களுக்குக் குடியேறியவர்கள் வாடகைக் குடியிருப்புகளிலேயே பெரும்பாலும் குடியிருக்கின்றனர். இதன் காரணமாகவே இம்மூன்று மாவட்டங்களில் வாடகைக் குடியிருப்பாளர் தொகை ஒன்றுக்கொன்று வேறுபட்ட விகிதாசாரத்தைக் காட்டுகின்றது. அத்துடன் நகர, கிராமங்களில் குடியேறும் கீழ் மத்தியதர வர்க்கத்தினர் தமது குடியிருப்புகளை அமைத்துக் கொள்ளும்போது வழிபாட்டுத்தலம், வைத்திய வசதி, நீர் விநியோக வசதி, நகர் சார்ந்த தன்மை என்பவற்றைப் பெரும்பாலும் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான எதிர்ப்பார்ப்புகள் காணப்படுவதற்கு கீழ் மத்தியதர வர்க்கமாக அவர்கள் வளர்ச்சி பெற்றுள்ளமையே காரணமெனக் கூறலாம்.

இக்குடிபெயர்வும், குடியிருப்பும் கீழ் மத்தியதர வர்க்கத்தின் இயல்பையே காட்டுகின்றன. 1971ம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 4.8% வீடுகள் பெருந்தோட்டங்களில் கீழ் மத்தியதர வர்க்கத்தினருடைய வீடுகளாகக் காணப்பட்டன. 1981ம் ஆண்டு இத்தொகை 11.4 வீதமாக அதிகரித்துள்ளது (பெருந்தோட்ட உத்தியோகத்தர், ஊழியர்கள்). இன்றைய உத்தேச மதிப்பீடு இத்தொகையை 24.9 வீதமாகக் காட்டுகின்றது. கீழ்வரும் வரைபடமானது பெருந்தோட்ட வீடுகளின் அளவையும், அறைகளின் எண்ணிக்கையையும் பலகொல்ல கிராமத்துடன் அவைப் பெற்றுள்ள சமாந்தரத் தன்மையையும் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் - 5.5
இலங்கைப் பெருந்தோட்ட வீடுகளின் தன்மை



வரைபடம் - 5.6
பலகொல்ல வீடுகளில் அறைகளின் தன்மை.



Source: Central Bank of Sri Lanka and Economic Statistics Comsumer Finance Survey - 1974, & 1984.

பெருந்தோட்ட சமூகம் கீழ் மத்தியதர வர்க்கத்தினராக சமூகப் பெயர்வினை அடைகின்ற போது அதற்கேற்ப அவர்களின் கலாசாரம், பழக்க வழக்கம், நடத்தை என்பன மாற்றம் அடைகின்றன. உதாரணமாக, லயன் வீட்டில் வாழ்கின்ற ஒருவனுக்கு ஆசிரியர் தொழில் அல்லது வெள்ளுடை உத்தியோகம் கிடைக்கும்போது அல்லது அவனின் சுய வியாபாரம் என்பவற்றால் அவன் வளர்ச்சி பெறும்போது உற்பத்தி உறவுகளும், சமூக உறவுகளும் அவனிடம் மாற்றம் பெறுகின்றன. அப்போது புதிய நபர்களையும் புதிய உறவுகளையும் அவன் சந்திக்கின்றான். வியாபார அந்தஸ்த்தும், சமூகப் பெறுமானங்களும் அவனுக்குக் கிடைக்கின்றன. இதற்கேற்ப அவனின் நடை, உடை, பாவனைகள் மாற்றம் பெறுகின்றன. உதாரணமாக ஒரு தோட்டத் தொழிலாளியின் பிள்ளைக்கு ஆசிரியர் தொழில் கிடைக்கும்போது அவன் கற்பதற்கு ஒரு மேசை, மின்சாரம், புத்தகங்களை அடுக்கி வைக்க ஒரு புத்தக அலுமாரி என்பன தேவைப்படுகின்றன. இதற்கு 10x12 சதுர அடி அளவுள்ள அறை போதுமானதல்ல. அங்கு அவன் புதிய நபர்கள், நண்பர்கள், சக ஆசிரியர்கள் என்போரைத் தன் வீட்டுக்கு அழைத்து வர விரும்புகின்றான். தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகள் (திருமணம் போன்றன) இத்தேவைகளை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. எனவே சமூக நிலையில் வளர்ச்சி பெற்ற இக்குடிமகன் குறைந்த பட்சம் வாடகை வீடொன்றையாவது நகரத்தில் அல்லது கிராமத்தில் பெற்று லயன் வீட்டிலிருந்து வெளியில் வர எத்தனிக்கின்றான். இதற்கான சேமிப்பு, கடன்பெறுதல் என்பனவாக அவனுடைய ஆரம்ப நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இப்புதிய குடியிருப்பு மாற்றங்கள் புதிய தேவைகளையும், அபிலாஷைகளையும் ஏற்படுத்தி அவன் வாழ்வியல் பண்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இவ்வாறாகவே மேற்கூரிய பலகொல்ல தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் புதிய தொழில், வியாபாரம் என்ற வளர்ச்சியில் புதிய வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். பலகொல்ல கிராமத்தில் 1989க்கு பின் குடியேறிய பல கீழ் மத்தியதர வர்க்கத்தினர், மற்றும் மத்தியதர வர்க்கத்தினர் சொந்த வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். தெல்தெனிய, குண்டசாலை பிரதேசத்திலுள்ளவர்கள் இவ்வாறான குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளமையை இந்திய வம்சாவளி தமிழ்மக்கள் இனம் என்ற புறக்கணிப்பு. பிரஜாவுரிமையின்மை என்ற காரணங்களினால் அவர்களால் காணி உரித்துரிமையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 1964ம் அண்டில் குடியுரிமை பெற்ற இந்தியத் தமிழரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜாவுரிமையுள்ள பிரிவினர் தம்மை இலங்கைத் தமிழரென்று அடையாளங்காட்டிக் கொள்கின்றனர். இவர்களில் சரியான எண்ணிக்கையினரை இனங்கண்டு கொள்ள முடியாத போதும் 1964, 1971 களின் பின்னர் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்ட இந்தியத் தமிழர்களில் சிறிய அளவினர் காணி நிலங்களைப் பெற்றுள்ளனர். எனவே மேற்படி ஆய்வின் படி பலகொல்ல கிராமிய தமிழர்கள் மத்தியதர, கீழ் மத்தியதர வர்க்கமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளனர், என்பது இந்திய தமிழர் வரலாற்றில் ஒரு பெரும் மாற்றம் எனலாம்.

இறுதியாக பலகொல்ல மக்களை ஒன்றிணைக்கின்ற அவர்களின் வாழ்வியலில் உணர்வுபூர்வமான செயற்பாடுகளில் உள்வாங்கப்பட்ட அமைப்பாக பலகொல்லயில் காணப்படுகின்ற இந்து கலாசார முன்னேற்ற சங்கம் பலகொல்ல வர்த்தக மற்றும் நலன் விரும்பிகளால் ஏற்படுத்தப்பட்டது இவ் அமைப்பு இந்து கலாச்சார மரபுரீதியான கலாசார நடவடிக்கைளில் ஈடுபடுவதுடன் இளம் மாணவர்களுக்கான நடனவகுப்புகள், சங்கீத வகுப்புகள், அறநெறி பாடசாலைகள் என்பவற்றை நடாத்திவருகின்றது. இவ் அமைப்பின் நடவடிக்கைகளிள் மக்கள் கூட்டாக ஈடுபடுவதுடன். அதன் ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் மக்களின் உள நல வாழ்வுக்கு உதவுவதுடன் அறநெறி வாழ்கைக்கும் வழிகாட்டுகின்றது.

எனவே மேற்குறிப்பிட்டவாறு பலகொல்லையில் தோற்றம் பெற்றுள்ள மத்தியதர, கீழ் மத்தியத்தர வர்க்கத்தினர் தாங்கள் ஒன்றிணைந்த ஒரு சமூகமாக இருப்பதன் மூலம் இனத்துவ அடையாளத்தையும் கலாசார பண்புகளையும் தெளிவாக வெளிப்படுத்துவது. சிறப்பான அம்சமாகும். இவ்வடையாளங்களை வெளிக்காட்டுவதில் மேற்குறித்த வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் அமைப்பாகிய இந்து கலாசார முன்னேற்ற சங்கம் போன்றது முன்னோடியாக திகழ்வது இதற்கோர் சிறந்த உதாரணமாகும்.

ஒரு மத்திய தர வர்க்கத்தின் தேவைகளை, அதன் அடையாளத்தை பேணத்தக்க வகையில் இவ்வாறான அமைப்புகள் காணப்படுவது இச்சமூகத்தினுடைய சமூக கலாசார ரீதியான இருத்தலுக்கு வழிவகுப்பதோடு எதிர்கால வாழ்வியலையும் இதுவே முன்னோடியாக அடையாளப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல திருவள்ளுவர் அறநெறிபாடசாலை வரலாற்றின் ஒரு கண்ணோட்டம்

சிறப்பான இந்து தர்மத்தை கற்க பலகொல்ல வாழ் அநேக இந்து மக்களின் பிள்ளைகளுக்கு ஒரு இடம் இல்லாமல் தவித்து கொண்டிருக்கும் வேளையில், பலகொல்லயில் ஓர் அமைப்பாக இயங்கிக் கொண்டிருந்த இந்து கலாசார முன்னேற்ற சங்க அங்கத்தவர்களுக்கு உதித்தது ஒரு உத்தம செயல், அதுதான் தத்தளித்து கொண்டிருக்கும் இந்துகளுக்கு இந்து தர்மத்தை கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம், அதன் பயனாக 2004ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி பலகொல்லயில் திருவள்ளுவர் அறநெறி பாடசாலை 15 மாணவர்களுடன், அப்போதைய மத்திய மாகாண சபைத்தலைவர் கௌரவ D. மதியுக ராஜா, மத்திய மகாண இந்து கலாசார அமைச்சின் செயலாளர் திரு.சாந்தகுமார், மற்றும் பல நலன் விரும்பிகள், பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர், செயற் குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் பெற்றோர்கள் ஆகியோரின் தலைமையில் மிக விழாக்கோலமாக இல. 26 கண்டி வீதி பலகொல்ல எனும் இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பதினைந்து மாணவர்களுடனும் ஒரு ஆசிரியையுடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறநெறி பாடசாலை காலப்போக்கில் முன்னேற்றம் அடைந்து இந்து மாணவர்களுக்கு இலவச கணனி வகுப்புகளையும் இன்று ஆரம்பிக்கக்கூடியதாயிற்று.

அறநெறி பாடசாலை ஆரம்பமான தினத்திலிருந்து மூன்று சிவராத்திரிகளை சந்தித்தது கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மண்டப அரங்கில் இந்த மாணவர்கள் இந்து வரலாறு சம்பந்தமான நடன, நாடகங்களை இயக்கி மேடையேற்றி பல பாராட்டுக்களையும். பெற்றுள்ளார்கள்; அது மட்டுமா, 2007ம் ஆண்டு பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலய அரங்கில் ஒரு நாட்டிய நாடகத்தை மேடையேற்றி பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் பாராட்டையும், பெற்று கொடுத்துள்ளார்கள்.

அன்று 2004ம் ஆண்டு 15 மாணவர்களுடனும் ஒரு ஆசிரியையுடனும் ஆரம்பிக்கப் பட்ட இந்தப் பாடசாலை இன்று 62 மாணவர்களைக் கொண்டுள்ளது என்பதை பெருமையுடன் கூறலாம்.

இந்த அறநெறி பாடசாலை இல 26 கண்டி வீதி, பலகொல்ல எனும் இடத்தை வாடகைக்கு பெற்று வாடகை இடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. எமது செயல்பாடு ஒரு நிரந்தர இடம் வேண்டும் என்பதனால் அரசுடனும் மகாவலி அபிவிருத்தி சபையுடனும் பல போராட்டங்களை நடத்தியபின் எமக்கு 10 பேச்சஸ் நிலம் கிடைத்ததுள்ளது.

எம் அங்கத்தினர் "அச்சமில்லை அச்சமில்லை" என்ற கூற்றை மனதில் கொண்டு திருவள்ளுவர் அறநெறி பாடசாலையின் மூன்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு ஒரு பெரும் தமிழ் கலை விழாவையும் ஏற்பாடு செய்துள்ளனர், என்பதை மிக பெருமையுடன் இங்கு கூற வேண்டும்.

இவ் விழா சிறப்புற நடைபெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

A. கிருஷ்ணமூர்த்தி (சங்க கணக்காளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராம கிருஷ்ணர்

பிறந்த இடம்	:-	வங்க மாநிலம் கமார்பு கூர் கிராமம்
திகதி	:-	1836 மாசி மாதம் 18ம் திகதி
தந்தையார்	:-	குதிராம் சட்டர்ஜி
தாயார்	:-	சந்திரமணி அம்மை
இளமைப்பெயர்	:-	கதாதரர்
மனைவி	:-	சாரதா அம்மையார்
போதனையில் ஒன்று	:-	"மனிதனே, பொறுமையாக இருப்பதுதான் உலகிலேயே மிகவும் சிறந்த பண்பு, பொறுமையாக இருப்பவன் வாழ்கிறான் பொறுமையில்லாதவன் அழிகிறான்"
இறப்பு	:-	1886 ஆவணி 16

சுப்பிரமணிய பாரதியார்

பிறந்த இடம்	:-	திருநெல்வெலி மாவட்ட எட்டயபுரம் ஊர்
திகதி	:-	1882 மார்கழி 11ம் திகதி
தந்தையார்	:-	சின்னச்சாமி ஐயர்
தாயார்	:-	லட்சுமி அம்மாள்
இளமைப்பெயர்	:-	சுப்பிரமணியன்
செல்லப்பெயர்	:-	சுப்பையா
"பாரதி" பட்டம்	:-	எட்டயபுர சமஸ்தானம்
மனைவி பெயர்	:-	செல்லம்மா
போதனையில் ஒன்று	:-	சுதந்திர பாடல்கள் இந்தியா சுதந்திரம் பெற வழிவகுத்தது.
இறப்பு	:-	1921 புரட்டாதி 11ம் திகதி

சுவாமி விவேகானந்தர்

பிறந்த இடம்	:-	வங்காளத்தில் கல்கத்தா நகரம்
பிறந்த திகதி	:-	1863 ஆனிமாதம் 12ம் திகதி
தந்தை	:-	விசுவநாத தத்தர்
தாயார்	:-	புவனேஸ்வரி
இளமை பெயர்	:-	நரேந்திரன்
போதனையில் ஒன்று	:-	"இறைவன் உண்டு என்ற கொள்கை சிக்காகோ சர்வமத மகாநாடு (1893 செப்டம்பர் 11ம் திகதி) இந்துமத பிரதிநிதியாக கலந்து கொண்டு ஆற்றிய உரை அமேரிக்க மக்களை ஈர்த்தது "அன்பான சகோதர சகோதரிகளே"
இறப்பு	:-	1903 ஆடி மாதம் 4ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்த அடிகள்

பிறந்த இடம் :- மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலுள்ள காரையம்பதி
பிறந்த திகதி :- 1892 பங்குனி 29 திகதி
தந்தை :- சாமித்தம்பி
தாயார் :- கண்ணம்மை
இளமை பெயர் :- மயில் வாகணன்
தீட்சா சாமம் :- "பிரபோத சைதன்யர்"
குருப்பட்டம் :- சுவாமி விபுலானந்தர்
எழுதிய நூல் :- யாழ்நூல்
இலங்கை பல்கலைக்கழகம் வழங்கிய பட்டம்:- இலக்கிய கலாநிதி

ஔவையார்

பிறந்த இடம் :- தமிழ் நாடு
:- சங்க காலத்தவர்
தந்தையார் :- பகவன்
தாயார் :- ஆதி
இயற்றிய நூல்கள் :- ஆத்திசூடி, கொன்றை வேதந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை
:- அதியமான் வள்ளல் கொடுத்த நெல்லிக் கனியை ஔவையார் உண்டு நீண்டகாலம் வாழ்ந்தார்" இறைவனிடம் வேண்டி முதுமைக் கோலம் பெற்றவர்

திருவள்ளுவர்

2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்
பிறப்பு, வளர்ப்பு உண்மை வரலாறு கிடைக்க வில்லை.
பிறந்த இடம் :- தமிழ்நாடு
இல்வாழ்க்கையில் நின்று ஒழுகியவர்
சிறப்பு பெயர்கள் :- தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர்
குறிக்கோள் :- "உலகம் ஒரு குலம்"
தத்துவம் :- காதலும், பொருளும் வாழ்க்கைப்படிகள் அறம் வாழ்க்கையின் உயர்நிலை

ஆறுமுக நாவலர்

பிறந்த இடம் :- யாழ்ப்பாணத்து நல்லூர்
பிறந்த திகதி :- 1822 மார்கழி மாதம் 18ம் திகதி
தந்தையார் :- கந்தப்பிள்ளை
தாயார் :- சிவகாமி
இளமைப் பெயர் :- ஆறுமுகம்
"நாவலர்" பட்டம் :- சென்னை திருவாவடுதறை ஆதீனம்
தொண்டு :- சைவப் பிள்ளைகளுக்கு திண்ணைப் பள்ளியை ஆரம்பித்தார்.
கஞ்சிதி தொட்டி தர்மம் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை
இறப்பு :- 1879 கார்த்திகை 21 ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபோடுவது ஏன்?

ஏதாவது காரியத்தை தொடங்கும் முன் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப்பதுதான் முறை அதாவது "உ" என்று போடும்போது இந்த எழுத்திலுள்ள வளைவான கொம்பு "சக்தி" தத்துவத்தையும் கீழ்க்கோடு (படுக்கையோடு) "சிவ" தத்துவத்தையும் குறிக்கின்றது. இவை இரண்டையும் சேர்த்து எழுதினால் அதுதான் விநாயகர் தத்துவம்.

இது மட்டுமல்ல உ என்னும் எழுத்து பிரணவ மந்திரத்தின் இரண்டாவது எழுத்து ஓம் காரமானது பிரணவம் அதாவது அ உ - ம் என்று மூன்று எழுத்துக்களும் உலக அமைப்பிற்கே மூலாதாரமானது உலகம் என்று எழுதும்போது முதலில் வருவது "உ" என்ற எழுத்துத்தான் எந்த எழுத்திலும் முதலில் வருவது உ என்று எழுத்துத்தான் எந்த எழுத்திலும் எந்த வார்த்தையிலும் உ என்ற சபதம் தோன்றும் அதாவது பிள்ளையார் எல்லா இடத்திலும் இருப்பதைக் காட்டுகிறது.

- அ - உ - ம என்ற எழுத்துக்கள் மூன்றும் மும்மூர்த்திகளைக் குறிக்கிறது.
- அ என்றால் பிரம்மா அதாவது சிருஷ்டிகர்த்தா
- உ என்றால் விஷ்னு அதாவது பரிபாலனத்தையும் காத்தலையும்
- ம என்றால் ஈசுவரன் அதாவது ஸமஹாரத்தையும் குறிக்கிறது என்று தேவி புராணம் கூறுகிறது.

நன்றி

ராஜேந்திரன் நிவேதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடத சிந்தனைகள்

எமது சமயத்தில் முதல் நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். இவற்றில் வேதம் அடர்ந்து பெருத்து ஒரு மரமாக விளங்குகின்றது. அதன் பழுத்த கனிகள் என விளங்குபவையே உபநிடதங்கள். இவை எமது சமயச் சிந்தனையின் சிகரமாக விளங்குகின்றன.

"பன்னிரு உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலது போல"

என்று மகாகவி பாரதியார் அவற்றை விதந்து கூறுகின்றார்.

வடமொழியில் அமைந்துள்ள இந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியிற் பெயர்த்து எழுதிய பெருமை பிறமத இளவரசன் ஒருவனையே சாரும். அவன் பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த "மொகலாயன" என்ற பேரரசன் ஷாஜஹானின் மூத்த மகனாகிய "தாரஷிகோ" என்பவன். பெரும்பாலும் பாரசீக மொழியிலிருந்தே மேல்நாட்டு மொழிகள் பலவற்றில் இவை மொழிபெயர்க்கப்பட்டன. உலக மேதைகள் பலர் இவற்றால் கவரப்பட்டனர்.

முற்கால கல்வி முறையான குருகுல கல்வி மாணவர்கள் ஆசிரியர்களோடு பல்லாண்டுகள் சேர்ந்து வாழ்த்து பெற்ற நினைவுக் குறிப்புக்களாக இந்த உபநிடங்கள் விளங்குகின்றன. பாடம் தொடங்கும் முன் குருவும் சீடர்களும் கற்றலில் கூடிய ஒத்துழைப்பை வழங்குவர்கள் பிராத்தனைகளில் பல உபநிடதங்களில் காணலாம் பௌதீகப் பொருள்கள், உயிர்கள் தெய்வங்கள் என்னும் மூன்று தொகுதிகளாலும் விளையக்கூடிய துன்பங்களை தவிர்ப்பதற்கு மூன்று முறை பிராத்தனையின் இறுதியில் "சாந்தி" கூறுவது இந்து சமயத்தவர் புராதன காலந்தொட்டு மேற்கொள்ளும் வழக்கமாகும். பல அரிய தத்துவக் கருத்துக்களைக் கதைகள் மூலமும் உரையாடல்கள் மூலமும் விளக்குவது உபநிடதங்களின் குறிப்பிடதக்க ஓர் அம்சமாகும்.

S. வேனுஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவலிமை

பூமியில் மிகப்பெரிய சக்தி மனமே. எவன் மனத்தை அடக்கும் திறன் பெற்றுள்ளானோ, அவன் அனைத்துச் சக்தியும் உடையவன் ஆகிறான். மனித இனத்தின் அற்புதமான, அதிசயிக்கத்தக்க திறன்கள் பற்றி அறிந்தால், நாம் மலைத்து, அயர்ந்து விடுவோம். இந்தப் புதிரான மனித மனத்தின் வழி அல்லது இருப்பிடம் அல்லது ஆதரவு இறைவனே. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், பலவேறு ஆற்றல் மிக்க செயல் திறன்கள் உள்ளன. அவன் ஆற்றலும் அறிவும் உடைய ஒரு பருவ வெளியீடாக இருக்கிறான். இதனை உணர்ந்தால், இயற்கையின் உள்வெளி ஆற்றல்களை வெல்ல முடியும். மிக உயர்ந்த நிலையை அடைய முடியும்.

A. Kabilasha

சுப தினம்.

சுப தினமாம் சுப தினம் பாரதி தோன்றி புரட்சி
கவிதை தந்தார் விடுதலைக்கு சுப தினம்.
காந்தி பிறந்து போதனை தந்தார்
சுதந்திரத்திற்கு சுப தினம்
புத்தன் பிறந்து தேன் மொழி தந்தார்
அன்புக்கு அது தான் சுப தினம்
நாவலர் பிறந்து பொன்மொழி தந்தார்
தமிழக்கு அது தான் சுபதினம்
திருவள்ளுவர் அறநெறி பாடசாலை தோன்றி
அறநெறி தந்தது அறிவுக்கு
அது தான் சுப தினம்

R. முகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம்



குழந்தை அழுவது
ஒரு சத்தம்
வெயில் அடிப்பதோ
நித்தம்.
மனிதனுக்கு தேவை சுத்தம்
இவ்வுலகில் நாம் வாழ்வது
சித்தம்
தினமும் கேட்கும் எங்கள்
அதிபரின் அன்பு சத்தம்
இதைக் கேட்டு மாணவர் மத்தியில் ஏற்படும்
ஒழுக்கம்
தமிழ் மக்கள் பலர் செத்தும்
இழந்த பல லட்ச சொத்து
ஏன் இன்னும் முடியவில்லை
இந்த யுத்தம்.

K. நிரோஷன்
திருவள்ளுவர் அறநெறி
பலகொல்ல

இந்து தர்மத்தில் இருந்து சில துளிகள்

1.	பஞ்சாமிர்தம்	பழம், தேன், சக்கரை, நெய், கற்கண்டு
2.	பஞ்ச தீபம்	ஒற்றைத்தீபம், அடுக்குதீபம், கற்பூரதீபம், நாகதீபம், கும்பதீபம்.
3.	ஐம்புலன்கள்	மெய், வாய், கண், மூக்கு, செவி.
4.	ஐம் பொறி	சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
5.	மும்மலங்கள்	ஆணவம், கன்மம், மாயை
6.	பஞ்சதோத்திரம்	தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்
7.	பஞ்சமாபாதகங்கள்	பொய், களவு, கொலை, கள்ளுண்ணல், காமம்
8.	பஞ்சாங்கம	திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவற்றைக் கொண்டு கணிக்கப்படுகின்றது.

நன்றி

செல்வன் சௌந்தராஜன் ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி உறங்கப் போகுமுன்

தியானம், யோகம், ஜபம் நலன்கள் செய்தேனில்லை நித்தியம் உன்மை வழிபடுவதிலும் சுணக்கம் ஏற்பட்டு விடுகிறது. என்குறைகள் அறிந்து திருத்திக் கொள்ளும் வல்லமையும் எனக்கில்லை உலகைக் காப்பவளே! என் குறைகளை ஒரு தாய் போல் பொறுத்து மன்னித்து நாளை முதலேனும் நான் நெறிபிசகாது வாழ அருள் புரிவாய்.

(பவன் யாஷ்டக ஸ்தோத்திரம்)

மாணவர்கள் தினமும் படிக்கத் தொடங்குமுன் சொல்ல வேண்டியது.

அம்மா! நினைவாற்றலும் புத்திசாலித்தனமும் எல்லாவற்றிற்கும் மேல் வெற்றியும் வேண்டி உன்முன் நிற்கிறேன் சுகம் - சுதந்திரம் இவற்றின் மூலதாரம் அதுதான் அத்தகைய வெற்றியை அடைய என் உற்ற துணை யாக நீ இரு.

(மஹாஷ்மி அஸ்டகம்)

பெண்கள் குங்குமம் வைக்கும் போது

உன் பாத தூளியிலிருந்து எடுத்து நான் தரிக்கும் இந்தக்குங்குமம் அந்த விதி புருஷனாக்கப்பட்டவன் என் நெற்றியில் எழுதிவிட்ட துர் அக்ஷரங்களை அழித்து என் பாவங்களைப் போக்கி அருள்புரிவாய் ஸ்ரீ மஹாலஷ்மி தாயே என இறைஞ்சுகின்றேன்.

காலை எழுந்ததும்

இறைவா! உலகம் முழுவதும் மகிழ்ச்சியில் திளைத்து இருக்கட்டும். உயிரினங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு துளியேனும் சுதந்திரக் காற்று சுவாசிக்கக் கிடைக்கட்டும். உண்மைகள் எல்லாம் பீடம் ஏறட்டும் ஆள்பவர்கள் நன்னெறி பிறழாதவர்களாக விளங்கட்டும். மேகங்கள் மழையை ஒளித்து வைக்காமலிருக்கட்டும். புண்ணியம் செய்த புனிதர்கள் யாவரும் பயமின்றி துக்கமின்றி வாழட்டும்.

கும்பம் கொண்டுள்ள கூறுகளின் பொருள் என்ன?

குடம்	-	தசை
அதனுள் உள்ள நீர்	-	குருதி
அதனுள் உள்ள இரத்தினங்கள்	-	எலும்புகள்
குடத்தை சுற்றி உள்ள நூல்	-	நாடிகள்
செபிக்கப்படும் மந்திரம்	-	உயிர்
கூர்ச்சம் (தருப்பை)	-	தலைமயிர்
மாவிலை	-	சடை
தேங்காய்	-	தலை
வஸ்திரம்	-	தோல்.

காந்தி டிலுஷனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய கிரியைகளும் - தத்துவங்களும்

நற்காரியங்கள் : ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுப காரியங்கள் நடைபெறும் போது மாவிலைத் தோரணம் இலையின் முன்பக்கம் வாசலின் முன்பக்கமாகவும் காம்பு பின்பக்கமாகவும் முன்புறமாக வளைத்து இலையின் நடுப் பகுதியில் குற்றிக் காம்பு பின்பக்கம் தெரியும் வண்ணம் தொங்கவிடுதல். இது சுபக்காரியத்துக்குரிய அறிக்குறியைக் காட்டும் தன்மையாகும்.

கும்பம் வைக்கும் போது : தேங்காயின் கீழ் அமைத்தல் ஐந்து அல்லது மூன்று அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

அபரக்கிரியைக் காலங்கள் : இது வீட்டில் மரண சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறை. மாவிலையின் நடுப்பகுதியை இலையின் காம்பு பின்புறமாக மடித்து தொங்கவிடல் முறையாகும்.

நித்திய கருமங்கள்

ஆசார அனுட்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் நிறைந்த பூரணத்துவம் கொடுப்பதாகும். சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்கள் முடித்து, தண்ணீரைச் சிவத்தீர்த்மாகப் பாவித்து, ஸ்நானம் போன்றவை குறைந்தது ஐந்து நிமிடமாயினும் செய்து, இயலுமாயின் ஆலய தரிசனம் செய்து, சுத்தமான வாழையிலையில் உணவு உண்ணல் உத்தமமானது.

ஆக்கம்
ஸ்ரீ. கௌசல்யா

இந்து தர்மத்தில் ஐந்து

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் எதுவும் இல்லை. ஆமாம் தினமும் ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தினை ஓதி வந்தால் எமது வாழ்வு வளமாகும் ஐந்தெழுத்தினை "சிவாய நம" என்றும் நமசிவாய என்றும் உச்சரிக்கலாம். நமசிவாய மந்திரத்தை நாயன்மார்கள் பல இடங்களில் வைத்துப் பாடியுள்ளார்கள். எங்கள் திருநாவுக்கரசர் நமசிவாயப் பதிகம் பாடியுள்ளார் அவர் கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமசிவாயவே எனக் குறிப்பிடுகிறார். திருஞான சம்பந்தரோ வேதம் நான்கிலும் மெய் பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே என்று தேவார ங்களில் பாடியுள்ளார். அதே போன்று சுந்தரமூர்த்தி நாயனார் "சொல்லு நா நமசிவாயவே" என்றும் மாணிக்க வாசகசுவாமிகள் நமசிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க என்றும் பாடியுள்ளார் இந்த நமசிவாயவில் "நம" என்ற இரு எழுத்து ஆன்மாவையும் "சி" என்ற எழுத்து கடவுளையும் "வாய்" என்பது மலங்களையும் குறிக்கும். என்று அறிஞர்கள் கூறுவார்கள் இந்த பஞ்சாட்சர மந்திரம் அநாதியான முப்பொருட்களையும் உணர்த்து வதனால் பலம் பொருந்திய மந்திரம் என்று சொல்லப்படுகின்றது.

நன்றி

கீர்த்தனா சொந்தரராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் அறநெறி கல்விக்கூடந்தனிலே.....

அமைதியாய் சிருஷ்ட்டிக்கப்பட்ட கல்விக்கூடந்தனிலே
அன்புமயமான நம் மதம் தழைக்க

பல்லோராலும் பேணித் தந்த கூடம்
பண்புடன் வாழக் கற்று தந்த கூடம்

திகட்டாத கல்வியை மேலும் இனிக்கச் செய்திடும்
திகம்பரியாள் படைத்த திருவள்ளுவர் அறநெறி கூடத்துக்கு

அகவை மூன்று ; அஸ்திவாரம் ஒன்று.

சிந்துவெளி முதல் நம் சீவியம் வரை
சிரிப்புடன் கற்றுத்தந்த
வணக்கத்துக்குரிய ஆசான் - அவர்கட்கு
வண்ணமயமான வணக்கங்கள்

எத்தனை எவ்வங்கள்,
எத்தனை தடைகள்
அனைத்தும் அகன்று
அழியாக் கல்விக் கூடமாய் தழைக்க

திருவள்ளுவர் அறநெறி கூடத்துக்கு என்
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்.

யமுனநாதன் காயத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் தருமம் வெல்லும்

"தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் போது மக்கள் உய்ய வேண்டி நான் தோன்றுவேன்"

கையறு நிலையில் கலங்கி நிற்கும் மக்களுக்கு இவ்வாறு உறுதியுரை கூறுபவன் கண்ணன்.

மக்கள் மனதில் தாழ்வுணர்வுகளுக்கும் உன்னத குணங்களுக்கும் இடையே நாள் தோறும் நிகழும் போராட்டத்தினைக் குறிப்பதே மகா பாரதப் போர்.

மனிதன் தனது பாசங்களை அறியாமையை வென்று உள்ளே இருக்கும் கிருஷ்ணரை உணர வேண்டும். பகவத் கீதை தரும் செய்தியைப் பாருங்கள்.

நாம் நமது கடமைகளை விருப்பு, வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும். சேவை ஆற்றும் போது பலன் கருதாமல் பணிபுரிய வேண்டும். நான் என்னும் அகந்தையை விடுத்து இறைவனின் கருவி என்ற பணிவுணர்வுடன் ஆணவ முனைப்பின்றி செயற்படல் வேண்டும். வாழ்க்கையின் உயர்மட்டம், கீழ் மட்டம் ஆகிய இரு நிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும். நண்பன் எதிரி என்ற வேறுபாடு இன்றி செயலாற்றும் பக்குவம் வேண்டும். வெற்றி, தோல்வி இரண்டினையும் ஒக்கவே நோக்கும் மனத்திராணி வேண்டும்.

இன்று அல்லலுற்று, அலறி, அலமந்து நிற்கும் நமக்கு கீதை தரும் செய்தி மனவுறுதியைத் தருகிறது. வாழ்க்கையில் நம்பிக்கை பிறக்கச் செய்கிறது.

தருமத்தை ஒரு நாள் சூது கௌவும். ஈற்றில் தருமம் அதனை வெல்லும் என்ற நம்பிகை நமக்கு வேண்டும்.

திருமதி. சாந்தினி அறிவானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்க விளக்கம்

சூரியனை வைத்து நாளும், சந்திரனை வைத்து மாதமும் கணிக்கப்பட்டன. சந்திரமாதம் சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம், என்று இரண்டாக பிரிக்கப்பட்டது. வளர்பிறை சுக்கில பட்சம், என்றும் தேய்பிறை கிருஷ்ண பட்சம் என்றும் சொல்லப்பட்டது. பட்சத்தின் பதினான்கு நாட்களும் பிரதமை, துவிதை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தபி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி, சதுர்த்தசி என்றழைக்கப்பட்டன. முழுநிலவு நாள், பௌர்ணமி என்று குறிப்பிடப்பட்டது. சந்திரன் தேய்ந்து முழுமையாக மறையும் நாள், அமாவாசை எனப்பட்டது. விநாயகர் சதுர்த்தி, கோகுலாஷடமி, நாமநவமி, நாகபஞ்சமி என்றெல்லாம் நாட்கள் குறிப்பிடுவதை உணர்ந்தால் இந்துக்கள் இந்த அமைப்பு முறைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலா, விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்று சூரிய மாதங்கள் வகுக்கப்பட்டன. வாரத்தின் ஏழு தினங்களும் சூரிய தினம் ஞாயிற்றுக்கிழமை என்றும், சந்திரதினம் திங்கட்கிழமை என்றும், செவ்வாய் தினம் செவ்வாய்க்கிழமை என்றும், புதன் தினம் புதன்கிழமை என்றும், வியாழன் தினம் வியாழக்கிழமை என்றும், சுக்கிரதினம் வெள்ளிக்கிழமை என்றும், சனி தினம் சனிக்கிழமை என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த விடயங்களையெல்லாம் தொகுத்துச் சொல்லும் ஏட்டை இந்துக்கள் பஞ்சாங்கம் என்றழைக்கிறார்கள். வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து விடயங்களை முக்கியமாக உள்ளடக்கி இருப்பதால் பஞ்சாங்கம் என்ற பெயர் ஏற்பட்டது.

தியாகராஜா - விதுர்ஷன்



நற்சிந்தனைகள்

- விடாமுயற்சி, நேர்மை இரண்டும் இணைந்ததால் வெற்றியே சித்திக்கும்.
- நிலையற்ற வாழ்விலே பணமும் நிலையற்றதுதான். முயற்சி செய்து கொண்டே இருந்தால் முடிவில் வெற்றிதான்.
- வாழ்வில் முன்னேறுவதற்கு நெஞ்சில் தைரியமும் உதட்டில் உண்மையும் இருந்தால் போதும்.
- அநித்தியமான வாழ்வில் அன்பு ஒன்றே நித்தியமானது.
- பக்தி என்பது வெறுமனே நாம் கொள்ளும் ஒரு நம்பிக்கை அல்ல. அது உலகின் உயிர்மூச்சு; தனிமனிதனின் முழுமையான உரிமை.
- கலாச்சாரம் என்பது மனங்களிலும் மற்றும் குண நலங்களில் தான் வாழ்கின்றது.

செல்வன் ம.மிதுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் இருப்பிடம்

கடவுளுக்கு மனிதனைப் படைத்த சிறிது காலத்துக்குள்ளேயே,அவனை ஏன் படைத்தோம் என்றாகிவிட்டது. காரணம், மனிதர்கள் ஏதாவது ஒரு கோரிக்கையை நிறைவேற்றி க்கொடுக்கும்படி கேட்டு, கடவுளைத் தொல்லைப்படுத்த ஆரம்பி த்து விட்டார்கள்.

கடவுள் தேவர்களை அழைத்து "எங்கே போய் ஒளிந்து கொள்ளலாம்" என ஆலோசனை கேட்டார். அதற்கு தேவர்கள், "இமயமலையின் உச்சிக்கே போய் விடுங்கள்" என்றனர். மனிதர்கள் எவரெஸ்ட் சிகரத்திலே காலடி எடுத்து வைத்து விட்டா ர்கள். அங்கே என்னை தேடிக்கொண்டு வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? என்று கடவுள் கேட்டார்.

அப்படியானால் "பசுபிக் மகா சமுத்திரத்தின் அடியில் போய் ஒளிந்து கொள்ளுங்களேன்" "அதன் ஆழத்தையும் கூட அளக்க ஆரம்பித்து விட்டார்களே" என்றார் கடவுள்.

அப்படியாயின் சந்திரமண்டலம், செவ்வாய் மண்டலம் என்றெல்லாம் யோசனை சொன்னார்கள் தேவர்கள். அதெல்லாம் கூட மனிதர்கள் வரக்கூடிய இடங்களே என்று அச்சப்பட்டார் கடவுள். தேவர்களில் ஒருவர், கடவுளின் காதில் இரகசியமாகச் சொன்னார், "மனிதனின் மனதில் போய் ஒளிந்து கொள்ளுங்கள் அவன் தேடிப் பார்க்காத இடம் அது ஒன்றுதான்" கடவுளும் அவ்வாறே செய்தார்.

இன்றும் மனிதன் தன் மனதைத் தவிர, வேறு எல்லா இடங்களிலும் கடவுளை த் தேடிக் கொண்டுதான் இருக்கிறான்.

ஹம்சிகன் புஷ்பலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ போஷகர் அவர்களின்



பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச் சங்கம், திருவள்ளுவர் அறநெறி பாடசாலை, பலகொல்ல வாழ் இந்து மக்களுக்கு ஆற்றும் சேவை அளப்பெரியது ஒரு சமுதாய ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் சமய நெறி இன்றியமையாதது. அந்த பணியை செம்மையாக செய்துவரும் இச் சங்கம், எந்த ஒரு விடயத்தையும் பொறுப்புடன் செய்யும் அங்கத்துவர்களைக் கொண்டுள்ளது. அதன் சிறப்பாகும். இந்த தமிழ் கலை விழா 2007, நாடாத்துவதை எண்ணி நான் பூரிப்படைகின்றேன். மேலும் பல சாதனைகளை நீங்கள் படைக்க வேண்டும் என்றும் - எல்லாமே சிறப்பாக அமைய வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

வாழ்க வாழ்க

கௌரவ போஷகர்
A. கனகராஜ் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ ஜோதியின் ஆசியுரை :



கண்டி பலகொல்ல இந்து கலாசார முன்னேற்றச்சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலை தமது 3ம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழ் கலைவிழா (2007) நடத்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களுக்கு இந்துசமய வழிபாட்டு முறைகளையும் பண்ணிசை வகுப்புக்களுடன் இந்து சமய கோட்பாடுகளையும் கற்றுக்கொடுக்கிறார்கள். சிறுவயதிலேயே மாணவர்களுக்கு இறை உணர்வை ஏற்படுத்துகின்ற சமய வகுப்புகள் எதிர்காலத்தில் அவர்களை நல்வழிப்படுத்துகிறது. அத்துடன் மாணவர்களை சமயக்கல்வியில் ஊக்கப்படுத்துகின்ற வகையில் வருடம் தோறும் அவரவர் திறமைகளுக்கேற்ப பாராட்டுகளையும், பரிசில்களையும் வழங்கி கௌரவிக்கின்றனர். இப்படி. இந்துசமய விழுமியங்களுக்கு அமைய மாணவர்களை உருவாக்கி எமது சமயத்தையும், எதிர்கால சந்ததியினர் நல்வாழ்வையும் சிறப்புற அமையச்செய்த பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மென்மேலும் அவர்கள்தொண்டு காலம்காலமாக வளர வேண்டும் என எல்லாம்வல்ல செல்வ விநாயகர் திருவருளை வேண்டி ஆசிர்வதிக்கிறேன்.

(லோகா சமஸ்தா சுகினோ பவந்து)

சுபம்

சாதக பூஷணம்
சிவஸ்ரீ ஜோதி, பத்ம நாத குருக்கள்.
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல பௌத்த விகாரை அதிபதி வணக்கத்திற்குரிய தல் பொத தம்ம ஜோதி ஸதவிர தேரர் அவர்கள் வழங்கிய ஆசி செய்தி



UNIVERSITY OF PERADENIYA
MAR 2008
LIBRARY

இந்த பிரபஞ்சத்தில் சகல இனத்திற்கும் சகல மதத்தை சார்ந்த மக்களுக்கும் ஒரு கலாசாரம் நடைமுறை பழக்க வழக்கங்களை நெடுங்காலமாக பாதுகாத்து வருவது நாம் அறிந்த ஒன்று.

எனவே தமிழ் மக்களின் கலாசாரங்களை பேணிப்பாதுகாத்து எதிர்காலத்தில் இந்து கலாசாரங்களை பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறநெறிபாடசாலை காலத்தின் அவசியம் என நான் நினைக்கின்றேன்.

எங்கள் எதிர்காலம் எங்கள் பிள்ளைகளின் கையிலேயே தங்கி உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையால் பெரியோர்கள் ஆகிய நாங்கள் பாரம்பரிய பழக்க வழக்கங்களை பிள்ளைகளுக்கு நமது நற்செயல்களால் செய்து காட்ட வேண்டும் அவற்றை எழுத்துமூலமாக பாடசாலையிலும் செயல் முறையாக வீடுகளிலும் பயில வேண்டும் என்பதை நான் இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும் பலகொல்ல இந்து அறநெறி பாடசாலை ஆரம்பித்து குறுகிய காலத்தில் பிரபல்யமாகியதோடு மிகப்பெரிய சேவையையும் வழங்கிக் கொண்டிருப்பதுயிட்டு எனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கும் அதே வேளையில் இப்பாடசாலை குழந்தைகளின் எதிர் கால வளர்ச்சிக்கு நாளோரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

பலகொல்ல பௌத்த விகாராதிபதி
குண்டசாலை புத்தசாசன நிர்வாகசபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டசாலை பிரதேச சபை அங்கத்தவர்
திரு K.G. ஜயதிலக்க அவர்களின்
வாழ்த்துச் செய்தி



பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கத்தின் திருவள்ளுவர் அற நெறி பாடசாலை 31.05.2007 அன்று கண்டி இந்து கலாசார மண்டபத்தில் மூன்று வருட பூர்த்தியின் நினைவாக நடாத்தும் தமிழ் கலைவிழாவிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அறநெறி பாடசாலை ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை இவர்களின் முன்னேற்றத்திக்கு என்னால் இயன்ற உதவிகளை செய்து வருகிறேன் .

இச்சங்கம் ஆரம்பித்ததின் நோக்கம் மற்றும் எதிர்ப்பார்ப்புகளையும் நான் நன்கறிவேன். பரம்பரையாக வாழும் மலையக இந்து சிறார்களின் கல்வியறி வையும் சமய அறிவையும் வளர்த்து முன்னேற்றப் பாதையில் இட்டு செல்வ தோடு நகர்புற பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்களை இந்த பிரதேச மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த சங்கத்தை ஆரம்பித்தார்கள் என்பதையும் நான் நன்கறிவேன்.

பல விதமான தடைகளுக்கும் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று மூன்று வருடங்களை கடந்து ஒரு பெருங் கலைவிழாவை நடத்தும் அளவிற்கு வளர்ந்துள்ளதையிட்டு நான் பெருமைபடுகிறேன்.

சகல இனமக்களுக்கும் தங்கள் மதம் மொழி கலாசாரம் என்பவற்றை பேணி பாதுகாப்பதற்தேக அறநெறி பாடசாலை, இந்த சங்கம் என்றும் எங்களுடன் கலாசார ஒற்றுமையை கொண்டுள்ளது, இச்சங்கத்திற்கு எனது முயற்சியாலும் மற்று கிராம மக்களின் முயற்சியாலும் இறைவன் அருளாலும் மகாவலி அதிகார சபையினால் கொடுக்கப்பட்ட நிலத்தில் நிரந்தர கட்டிடத்தை அமைத்து மதக்கல்வியையும், ஒழுக்கத்தையும் போதித்து எமது குழந்தைகளை நல்வழிபடுத்த இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அரசியல்வாதி என்ற ரீதியில் எனது கடமைகளில் ஒன்றாகவோ அல்லது எனது சொந்த முயற்சியினாலயோ இந்த சங்கத்திற்கு என்னால் இயன்ற சகல உதவிகளையும் செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

உண்மை வெல்லும்
இதயசுத்தியுடன் செயல்படுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளரின் உள்ளத்திலிருந்து.....

எனது ஆசிச் செய்தியை இம் மலருக்கு அளிப்பதில் பேரின்பம் அடைகின்றேன்.

விழாக்கள் பல நடாத்திய எங்கள் மன்றம் இன்று மூன்றாம் ஆண்டினை பூர்த்தி செய்யும் கலை விழாவினை கொண்டாடுகின்றது.

தமிழும் சைவமும் இவற்றோடு இணைந்த கலைகளும், கலாசாரமும் பண்புகளும் தமிழர் தம் வாழ்வின் சிறபுகளும் செம்மைக்கும் என்றும் நிலை நின்று வளம்படுத்துவன. தொன்மையும் வன்மையும் வாய்ந்த தேன்மதுரத் தமிழையும், செம்மையும் நன்மையும் நிறைந்த, மேன்மை கொள் சைவத்தையும், இவற்றின் அடிப்படையில் அமையும் ஆடல், பாடல் நாடகம், அறிவு எனப் பரவும் பல்வேறு கலைகளையும் முன்னின்று வளர்த்தெடுக்கும் பணியில் பாரிய பங்களிப்பை எமது பலகொல்ல திருவள்ளுவர் அறநெறி நல்கி வருவது யாவரும் அறிந்த உண்மையாகும்.

எமது கலைவிழா சிறப்பு மலர் சிறப்பாக அமையக் காரணம் அதற்கு உரமிட்ட அனைவரதும் உள்ளம் நிறைந்த ஒத்துழைப்பேயாகும் அந்த வகையில் எமது மாணவர்களின் வளர்ச்சியில் எல்லா வகையிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்து அரும்பாடு பட்டு இவ்விழாவை நடத்தவும் மலரை வெளியிடவும் ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது திருவள்ளுவர் அறநெறி பாடசாலை ஆசிரியர் குழாத்தை என்றும் நாம் நினைவு கூறுவோம்.

இக்கலை நிகழ்ச்சிகளை வலுப்படுத்த நிதியால் உதவிய ஈகை உள்ளங்களும். உழைப்பில் உதவிய உறுதி நெஞ்சங்களுக்கும் இதழால் அல்ல மனங்கனிந்த இதயத்தால் நன்றி நவில்கின்றோம். இவ் விழா இனிது நிறைவுறவும் இவ்விழாவின் மலர் மணம் கமழவும் எல்லாம் வல்ல இறையருளை இனிது இறைஞ்சி எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் மனமகிழ்வுறுகின்றேன்.

நா. கனகராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி பாடசாலை பொறுப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம் திருவள்ளுவர் அறநெறி பாடசாலை 2004 ம் ஆண்டு 15 பிள்ளைகளோடு ஆரம்பிக்கப்பட்டது. 6 மாதத்திற்குள் கர்நாடாக சங்கீத வகுப்பு, நடனவகுப்பு, கணி[illegible] வகுப்பு (இலவச) கணணி வகுப்பு என்பன ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஏறக்குறைய [illegible]ளைகள் கல்வி கற்கின்றனர். அத்தோடு எல்லா இந்து சமய விழாக்களும் மன்றத[illegible] கொண்டாடப்படுகிறது. தமிழும் சைவமும் தழைத்தோங்க கலையும் தமிழ்க் கலாச[illegible] அன்பும் பண்பும் மனித நேயம் கொண்ட மானவர்களாக. திகழ வேண்டும்.

அவையில் நாடும் ஏடும் போற்றும் நல்ல [illegible] நெறி உண்டு என்றால் தித்திப்பில் தேனிலும் திறமென கூறப்படும் நெறி ஒன்று இருக்கின்றதென்றால் அதுதான் அறநெறி எழில் கொஞ்சும் மத்திய மலையகத்தின் கண[illegible] மாநகரில் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் 31.05.2007 ம் திகதி எமது திருவள[illegible] அறநெறி பாடசாலையின் 3ம் ஆண்டை கொண்டாடுவது சிறப்பம்சமாகும். இந்த [illegible]ழ கலை விழா (2007) சிறப்புற அமைய எல்லா வழிகளிலும் உதவிய அனைவகு[illegible]கும் மன மார்ந்த நன்றியை கூறுவதுடன். பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்க நிர்வாகத்தினர் அனைவரும் நேரம் காலம் பாராது இவ்விழாவை சிறப்பிக்க அரும்பாடுபட்டு செயலாற்றுவது மிகவும் மெச்சத்தக்கது.

இக் கலை விழா சிறப்பு மலர் சிறப்பாக வெளிவர வேண்டும் என வாழ்த்துவதோடு இன்னும் பல நூற்றுக் கணக்கான மாணவ குழந்தைகள் இந்த திருவள்ளுவர் அறநெறி பாடசாலையில் கல்வி கற்று நல்ல பண்பும் மனித நேயமும் நல்லொழுக் கமுள்ளவர்களாக முன் மாதிரியாக திகழ வேண்டும் என வாழ்த்துவதோடு, 2007 தமிழ் கலை விழா வெகு சிறப்பு பெறவேண்டும் என எல்லாவல்ல இறைவனை வேண்டுகிறேன்.

மு. செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் மாலை

எமது கலாசாரத்தின் தொன்மையினைச் சிறப்பிக்கும் முகமாகவும் அதன் புனிதத்தன்மையினை உலகிற்கு உணர்வுபூர்வமாக உணர்த்துவதற்காகவும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் எமது பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம் முதன் முதலாக சிறப்பு மலரொன்றை வெளியிட்டுள்ளதை இட்டு நான் பெரும் மகிழ்ச்சிய டைகிறேன். எமது மாணவ மாணவிகளின் திறமைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருவ தற்காக வெளியிடப்படும் இந்நூல் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன்.

இந் விழா சிறப்புற எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் சார்பாக நல்லாசியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்நூலை வெளியிட உணர்வுடனும், உற்சாகத்துடனும், முழுமையாக அர்ப்பணித்த ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பெற்றோர், இந்நூல் சிறப்பாக வெளிவர உதவி புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் மனமுவந்து சங்க அங்கத்தவர்கள் சார்பில் நன்றிகளையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி

வாழ்க தமிழ் வளர்க வையகம்

பொன்னுசாமிபிள்ளை
மனோகரன்
நிர்வாக சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல பொலீஸ் நிலைய பொருப்பதிகாரியின் வாழ்த்து செய்தி

சகல இன மக்களும் ஒன்றிணைந்து வாழும் இந்த சிறிய கிராமத்தில் - பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம் என்று ஒன்றை அமைத்து - அதன் மூலம் அறநெறி ஒன்றையும் நடாத்தி - வளர்ந்து வரும் சிறார்கள் மத்தியில் நல்லொழுக்கம் - ஆன்மீகம் போன்ற அளப்பெரிய சேவை செய்யும் இந்த சபை மூலமாக தமிழ் கலை விழா ஒன்று நடாத்துவதை கேட்டு பூரிப்படைந்தேன் - ஒரு குறுகிய காலத்தில் ஆரம்பித்து இது போன்ற மாபெரும் விழா ஏற்பாடு செய்து சமுதாயத்திற்கு முன்னோடியாக திகழும் உங்கள் மன்றம் எனது பொலீஸ் பிரதேசத்தில் அமைந்திருப்பது எனக்கு பெருமைதருகிறது மேலும் உங்கள் மன்றமும் அறநெறியும், கலைவிழாவும் சிறப்புற நான் பிராத்திக்கின்றேன் எந்த நேரத்திலும் என்னால் முடிந்த உதவிகளை உங்களுக்கு வழங்குவேன் தமிழ் கலை விழா 2007 சிறப்புற வாழ்த்துகிறேன்.

நன்றி

திரு. **M.D** சந்திரபால **I.P**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து செய்தி

பலகொல்ல திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலையின் மூன்றாவது ஆண்டு நிறைவை யொட்டி நடாத்தப்படுகின்ற கலை விழாவின் பொருட்டு வெளியிடப்படும் இக் கலை விழா சிறப்பு மலரில் கவிதை, கட்டுரை, தகவல்கள் என தமது ஆக்கங்களை வழங்கிய அனைத்து அறநெறி மாணவர்களுக்கும் இவ் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர்கள் என்ற வகையில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந் நிறுவனம் பல்லாண்டுகள் தமது அறப்பணியை மேற் கொண்டு சைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்றும் எம் உளமார்ந்த வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி

விளங்குக உலகமெலாம்"

என்று கூறி. வாழ்த்தும்

ஆசிரியர்கள்,
திருமதி K. புஸ்பகாந்தி.
செல்வி V. கிருஷாந்தி
செல்வி S. ஜெயமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல மேற்கு பிரிவு கிராம சேவகர்
D.G. அபேசிங்க அவர்களின்
வாழ்த்து செய்தி

2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திருவள்ளுவர் அறநெறி பாடசாலை இலக்கம் 26 கண்டி வீதி பலகொல்லயில் மிகவும் சிறப்பாக நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் மேலும் இந்த இந்து அறநெறி பாடசாலை இப்பிரதேசத்தில் வாழும் சகல இன மக்களையும் ஒன்றிணைத்து மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறேன்.

இந்த நிறுவனத்தில் தலைவராக இருந்து செயலாற்றி வரும் திரு. G.புஸ்ப்பலிங்கம் அவர்களினதும் செயலாளராக செயல்பட்டுவரும் திரு. M.விக்னேஸ்வரன் அவர்களினதும். இந்த நிறுவனத்தின் பொறுப்பதிகாரியாக இருந்து கடமையாற்றும் திரு. M.செல்வராஜா அவர்களினதும் முயற்சியையும் பொறுப்புணர்வையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

கடந்த மூன்று வருடங்களாக பல சிறுவர்களை ஒழுக்க சீலர்களாகவும் அறிவாளிகளாகவும் மாற்றி வரும் சங்கத்தின் ஏனைய சகல அங்கத்தவர்களையும் நினைவுகூர்வதில் பெருமிதம் அடைகிறேன். இந்த நிறுவனம் இப்பிரதேசத்தில் உள்ள சகல இன மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என விரும்பி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழா சிறப்புர உதவிய அன்பு நெஞ்சங்களே உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்

திரு. சுப்பையா பிள்ளை அவர்கள்
வசந்தாஸ் ஜுவலர்ஸ் கண்டி

திரு. V. பாலசுப்ரமணியம்
இன்டநெஷனல் ஹாட்வெயர் கண்டி

திரு. S. பிரேம்ராஜ்குமார்
காசன்ஸ் செரமிக் கண்டி

திரு. R. பாலகிருஷ்ணன்
101 பலகொல்ல கெங்கல்ல

திரு. R. மோகன்
நாகலிங்கம் ஜுவலர்ஸ் கண்டி

திரு. S. கோகிலன்
தீபா ஜுவலர்ஸ் கண்டி

திரு. ரவீந்திரன் அவர்கள்
பலகொல்ல

திரு.மணிராஜா
தர்ஷனி ஸ்டோர்ஸ் பலகொல்ல

திரு. ரவீந்திரன் அவர்கள்
நிவ் ஹொம் சென்டர் பலகொல்ல

திரு. N. ராஜேந்திரன்
595 பலகொல்ல

திரு.பாஸ்கரன்
கல்பனா ஹோட்டல் கண்டி

திரு.கிருஷ்ணமூர்த்தி
தேவி ஜுவலர்ஸ் கண்டி

திரு. S. கருணாமூர்த்தி
V.K.M. நாகலிங்கம்ஸ் கண்டி

திரு. T. கஜேந்திரன்
யுனைடட் புத்தக சாலை திகன

திரு.மோகன்
முத்து மாரி ஸ்டோர்ஸ் திகன

உதயா பிரதர்ஸ் திகன

திரு. செல்வம் (ஆசாரி)
கண்டி

திரு. தியாகராஜா அவர்கள்
பலகொல்ல

திரு. M. யமுநாநாதன்
உதயா ஜுவலர்ஸ் கண்டி

திரு. V. ஞானசேகரன்
பலகொல்ல

லக்ஷ்மி ஸ்டோர்ஸ் திகன

சாந்தி லதா ஸ்டோர்ஸ் திகன

திரு. P. நமசிவாயம்
P.N. ஸ்டோர்ஸ் திகன

திரு. S. சண்முகம் பிள்ளை
செனரத் வெல திகன

திரு. S. அருணாசலம்
ரத்தின மாளிகை கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க அங்கத்தவர் பட்டியல்

1.	இராஜேந்திரன்	595 பலகொல்ல
2.	S. ஆனந்த பிரகாஷம்	62 பலகொல்ல
3.	G. புஸ்ப்பலிங்கம்	19 பலகொல்ல
4.	M. லோகநாதன்	627/A பலகொல்ல
5.	S. நந்தகுமார்	55 பலகொல்ல
6.	V. தங்கையா	26 பலகொல்ல
7.	P. அருணாசலம்	286/1 பலகொல்ல
8.	S. நல்ல முத்து	44/1 ஊட்டியாகாவத்தை
9.	K. சுரேஸ்	44/2 ஊட்டியாகாவத்தை
10.	V. ஞானசேகரம்	44 ஊட்டியாகாவத்தை
11.	S. கனகராஜ்	560 பலகொல்ல
12.	S. ராஜ ஜெயகுமார்	15/1 A குருவிகொட்டுவ பலகொல்ல
13.	K. சிவகுமார்	101 பலகொல்ல
14.	V. வீரய்யா	2/1 பலகொல்ல
15.	K. குணசீலன்	198/A பலகொல்ல
16.	S. தியாகராஜா	66 பலகொல்ல
17.	T. அமர்நாதன்	50 ஊட்டியாகாவத்தை பலகொல்ல
18.	P. ரட்னகுமார்	397 பலகொல்ல
19.	K. கிருஸ்ண மூர்த்தி	19 பலகொல்ல
20.	R. முருகேசு	74 ஊட்டியாகாவத்தை பலகொல்ல
21.	P. சண்முகநாதன்	540 பலகொல்ல
22.	A. கிருஷ்ணமூர்த்தி	31 பலகொல்ல
23.	A. ரட்ணம்	07 பலகொல்ல
24.	A. மகேந்தரன்	2/12 பலகொல்ல
25.	K.V. செல்வராஜ்	63/A வராபிட்டிய / குண்டசாலை
26.	A. ஜெகதீஸ்வரன்	புதிய இல. 07 பலகொல்ல
27.	M. சௌந்தர ராஜன்	63/A வராபிட்டிய குண்டசாலை
28.	K. தாமோதரம் பிள்ளை	53 போகாபிட்டிய பலகொல்ல
29.	M. செல்வராஜா	25/1 குருவிகொட்டுவ பலகொல்ல
30.	N. ரவீந்திரன்	15/3 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
31.	M. யமுனாநாதன்	193 பலகொல்ல கெங்கால்ல
32.	T. தேவசகாயம்	61 பலகொல்ல
33.	V. பெரியசாமி	72 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
34.	M. ராஜேந்திரன்	39 தும்பரமாவத்தை பலகொல்ல
35.	P. மனோகரன்	69 பலகொல்ல
36.	R. நித்தியானந்தன்	334/E பலகொல்ல
37.	S. கோபால மூர்த்தி	385 பலகொல்ல
38.	M. செல்வராஜா	42/B பலகொல்ல
39.	A. கணபதி	18/11/1 கல்மகுவத்தை பாதை நத்தரம் பொத்த குண்டசாலை
40.	வீ. முருகையா	2/2/ பலகொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41.	S. சோமரத்னம்	60 பலகொல்ல
42.	S. சுப்ரமணியம்	390 பலகொல்ல
43.	N. ரவீந்திரன்	15/3 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
44.	N. தங்கராஜ்	78 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
45.	S. நாராயணன்	78 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
46.	V. அறிவானந்தன்	226 புதிய நகர் திகனை ரஜவெல்ல
47.	V. ராஜேஸ்வரன்	241/1 பலகொல்ல கெங்கல்ல
48.	S. சௌந்தர ராஜ்	241 பலகொல்ல
49.	A. பத்மநாதன்	24 பலகொல்ல
50.	K. ஸ்ரீ தரன்	92 பலகொல்ல
51.	N. செல்வராஜா	63 பலகொல்ல
52.	V. சண்முகசுந்தரம்	2/27 பலகொல்ல
53.	S. பாலகிருஸ்ணன்	N/L/D/B கரந்த கொல்ல கோழிப்பண்ணை குண்டசாலை
54.	M. துரைராஜ்	439 பலகொல்ல
55.	S. சண்முகம்	78 ஊரட்டியாகாவத்தை பலகொல்ல
56.	B. தனராமராஜ்	334/C பலகொல்ல
57.	S.K. சிவகுமார்	334/C/1 பலகொல்ல
58.	M. விஸ்வநாதன்	192 பலகொல்ல
59.	N. குகசரன்	251 பலகொல்ல
60.	P. செல்லையா	518 பலகொல்ல
61.	V. லெட்சுமி	யூனிவசிட்டிபாம் தொடங்ககொல்ல குண்டசாலை
62.	N. சௌந்தரராஜன்	559 பலகொல்ல
63.	V. சுந்தர ராஜன்	4/6 பலகொல்ல
64.	K. ராஜேந்திரன்	3/8 பலகொல்ல
65.	Y. காந்தி	436 பலகொல்லஸ
66.	K. வில்சன்	9 துருனுசவியகம குண்டசாலை
67.	R. சுரேந்திரன்	42/7 இந்து மதி திகனை ரஜவெல்ல
68.	K. சிவராமன்	31/A பலகொல்ல
69.	M. ரட்ணமணி	33/1 இஸ்வல பிட்டிய கெங்கல்ல
70.	P. தயாளன்	1/562 பலகொல்ல கெங்கல்ல
71.	N. சிவானந்தன்	3/A Rarm St அலுத்வத்தை தகனை
72.	A. மகேந்திரன்	2/12 பலகொல்ல
73.	K. கோபால கிருஷ்ணன்	9 துருனுசவிகம பள்ளேகளை குண்டசாலை
74.	T. சுப்ரமணியம்	192/A பலகொல்ல கெங்கல்ல
75.	S. கிருஸ்ணராஜா	47 அம்பாகோட்டை கெங்கல்ல
76.	S. கதிரேசன்	28 ஜனவசமகம பள்ளேகலை குண்டசாலை
77.	S. மூர்த்தி	3/A வெப்பகாடன் பள்ளேகலை குண்டசாலை
78.	K. ராஜேந்திரன்	148/1 பன்சல வீதி கெங்கல்ல
79.	S. செல்வராஜா	17 தும்பர தென்னை பல்லேகெலை குண்டசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80.	R. குணசேகரன்	11 அம்ப செவனகம கெங்கல்ல
81.	M. சுப்ரமணியம்	42 கண்டி வீதி, கெங்கல்ல
82.	S. சோமசுந்தரம்	51 பால வெல கெங்கல்ல
83.	S. தமிழ் செல்வன்	10பாவெல
84.	S. ஸ்ரீதரன்	87/1 Kandy, Road, Balagolla, Kengala
85.	K. முத்து துரை	12/H/10 விஜேசிரிகம திகனை ரஜவெல்ல
86.	M. ராஜி	82/A பலகொல்ல கெங்கல்ல
87.	M. தியாகு	34/A பெபர்காடன் பல்லேகள குண்டசாலை
88.	R. மகேஸ்வரன்	B 268 ஜயசிரி உயன பள்ளேகல குண்டசாலை
89.	M. விக்னேஸ்வரன்	96 பலகொல்ல கெங்கல்ல
90.	G. சுந்தரலிங்கம்	64/1 பலகொல்ல
91.	K. விவேகானந்தன்	461/1 பலகொல்ல
92.	S. வைகுந்தன்	244 பலகொல்ல
93.	A. கனகராஜா	456 பலகொல்ல
94.	K. பரமேஸ்வரி	19/A தும்பரமாவத்தை பலகொல்ல
95.	S. தேவராஜ்	88 பலகொல்ல
96.	M. ஜெயரட்னம்	392/2A பலகொல்ல
97.	A. பாலகிருஸ்ணன்	101 பலகொல்ல
98.	கனகாசலம்	20. மேரிலன்ட்வத்த விக்டொரியா ரோட்/ தெல்தெனிய
99.	B. சிவராஜா	85/1 சம பீல்ட் பலகொல்ல
100.	முத்தையா சாமிவேல்	23/2 மெதவல கெங்கல்ல
101.	S. ரவிசந்திரன்	6. சம பீலட் மாவத்தை பலகொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல்

குத்துவிளக்கேற்றல்
திருவள்ளுவர் அரங்கம் அங்குராப்பணம்,
பஞ்சபுரானம் ஓதுதல்
அறநெறி கீதம் இசைத்தல்
வரவேற்புரை
ஏற்பாட்டு உரை
வரவேற்பு நடனம்
தமிழ் காத்த சான்றோர்களுடன் சிலநிமிடம்
பேச்சு "பாரதியார்"
தலைவர் உரை
உப தலைவர் உரை
கவியரங்கு "தமிழ் என்றும் உயிர் வாழ்தல் வேண்டும்"
(தலைமை கலாநிதி துரை மனோகரன்:
J. தியாகராஜா, N. கலைவானர், A. ரூபவதனா, S. சரன்யா)
நாடகம் (நக்கீரன்)
பேச்சு (சமய வாழ்க்கை)
நடனம் இந்து இளைஞர் மன்றம் கண்டி
பிரதம அதிதி உரை
நூல் வெளியீடு - வெளியீட்டு / ஆய்வு உரை கலாநிதி வ. மகேஸ்வரன்
பரிசளிப்பு
நடனம் (வேப்பிலைகாரி)
திருக்குறள் விளக்கம்
கரகாட்டம் (கலாபூஷனம் திரு. பச்சமுத்து)
பேச்சு (ஆறுமுகநாவலர்)
செயலாளர் உரை
நடனம் "இந்து இளைஞர் மன்றம் கண்டி"
கர்நாடக இசை கச்சேரி (திருமதி கலைவாணி ஜெகதிஸ்வரன்)
பேச்சு "ஸ்ரீ இராமகிருஷ்ணர்"
நடனம் வேலன்
பேச்சு "விவேகானந்தர்"
நடனம் "இந்து இளைஞர் மன்றம் கண்டி."
பேச்சு "விபுலாநந்தர்"
தேசிய கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி உரை

கண்டி வாழ் தமிழர் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் தமிழ் சான்றோர்களுக்கு குரு தட்சனையாக நிகழும் தமிழ் கலை விழா 2007 சிறப்பு மலரில் - எனது நன்றி வார்த்தைகளை மலையாகத்தொடுத்து உங்களுக்கு அணிவதில் பெரும்மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி சொல்வது எளிதான செயல்அல்ல. எப்படி நன்றி சொல்வது? யாருக்கு சொல்வது என்று யோசிக்கிறேன். எதற்கும் முதல் தேவை நிதி. நாமும் அதை நாடி பலரிடமும் சென்றோம். அவர்கள் அனைவரும் இன்முகத்துடன் வாரி வழங்கினார்கள். அவர்களுக்கு நன்றி சொல்லவா! இந்த மாபெரும் விழா நடைபெற என்னுடன் தோலோடு தோலாக நின்ற எமது சபை அங்கத்தவர்கள் குறிப்பாக திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. மனோகரன், திரு. வைகுந்தன், திரு. செல்வராஜ், திரு. சௌந்தரராஜன் அவர்களுக்கு சொல்லவா சிறப்பு மலர் வெளியிடுவதே தமது தலையாய செயல் என பொறுப்பேற்று பகலிரவு பாராமல் என்னுடன் பணிசெய்த திரு. மகேஸ்வரன் அவர்களுக்கா! எமது அச்சுவேலைகளை எமது தேவைக்கேற்ப காலம்கடத்தாமல் தந்துதவியது மற்றுமின்றி எம்மோடு அன்பாக ஒத்துழைத்த ஏசியன் பிரின்டஸ் நிறுவனத்திற்கா! என்று எனக்கு தெரியவில்லை எல்லோரும் என்னுடன் ஒத்துழைத்ததால்தான் விழா சிறப்புற்றது என்பது எனக்குத் தெரியும் ஆகவே உங்களுக்கு நன்றி நன்றி என்று கூறிக்கொண்டே இருக்கவேண்டும் என என் மனதில் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல இவ்விழா நடைபெற மண்டபத்தைதந்துதவிய மத்திய மாகாண இந்து மாமன்றத்தினருக்கும், எமக்கு நிகழ்ச்சிகளைத் தந்துதவிய கண்டி இந்து இளைஞர் மன்றம், திருமதி.கலைவாணி ஜெகதிஸ்வரன், பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி துரை. மனோகரன் அவர்கள், மற்றும் கலாபூஷனம் கலஹா பச்சைமுத்து அவர்களுக்கும், எமது அறநெறி பாடசாலை ஆசிரியைகள், நிகழ்ச்சிகளை பயிற்றுவித்த ஆசிரியைகள், கண்டி மலையக ஒளிபரப்பு சேவை திரு. மயில் வாகனம் அவர்கள், சூரியன் **FM** திரு. **A.R.V.** லோஷன் உட்பட அறிவிப்பாளர்கள் அனைவருக்கும் கண்டி **V.K.M.**நாகலிங்கம்ஸ் உரிமையாளர் திரு. கருணாமூர்த்தி அவர்களுக்கும், வீரகேசரி கண்டி நிருபர் **M.S.** குவால்தீன் அவர்களுக்கும் வீரகேசரி கண்டி முகாமையாளர் திரு. பாலேந்திரன் அவர்களுக்கும் மதுரா வீடியோ உரிமையாளர் திரு. **V.C.** மோகன் அவர்களுக்கும் மண்டப அலங்கார பொறுப்பாளர் ஆசிரியை சாந்தி அவர்களுக்கும் புத்தக வெளியீட்டில் எமக்கு உதவிய ஆசிரியர் திரு. ரா. நித்தியாநந்தன் அவர்களுக்கும் எமது அறநெறி பாடசாலை மாணவமாணவிகள், அன்பு பெற்றோர்கள் உட்பட இவ்விழாவிற்கு ஒவ்வொரு வகையிலும் உதவிய, பொறுப்பேற்று நடத்திய அன்பு நெஞ்சங்கள் உங்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்த்தி மனமார கூறுகிறேன்,

நன்றி... நன்றி... நன்றி...

செயலாளர்
M.P. விக்னேஸ்வரன் JP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் அறநெறி பாடசாலை
மாணவ – மாணவிகள்

திருவள்ளுவர் அறநெறி பாடசாலை
ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம்

බලගොල්ල හිංදු සංස්කෘතික සංවර්ධන සමිතිය

BALAGOLLA HINDU CULTURAL DEVELOPMENT ASSOCIATION

திருவள்ளுவர் அறநெறிபாடசாலை

இல.26 பலகொல்ல

சூரியன் FM

SOORIYAN FM

ஊடக அனுசரணை

இலங்கையில் முதல்தர வானொலி

சூரியன் FM

Printed By : Asian Printers - Kandy Tel : 081-4902478

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org